விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 - தாளம் 37 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 25 வியாழக்கிழமை (09.08.2012) | பக்கங்கள்: பதினாறு

# 700 முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு: அடுத்த மாதம் ஆரம்பம்

## ஒருவருட காலத்தில் சமூகத்தில் இணைக்கத் திட்டம்

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் புலி முக்கியஸ்தர்களையும் புலிகளுக்கு உதவினார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்களையும் நீதிமன்ற உத்தரவின் பேரில் புனர்வாழ்வளித்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் அ.திஸாநாயக்க தெரிவித்தார். சுமார் ஒரு வருட காலப் புனர்வாழ்வுக்குப் பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுவர் என்றும் இது தொடர்பான ஆரம்பப் பணிகள் அடுத்த மாதம் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் சொன்னார்.

நாடளாவிய ரீதியில் சிறைகளில் இருக்கும் சுமார் 700 சிறைக் கைதிகளுக்கும் அவர்கள் விரும்பும் பட்சத்தில் புனர்வாழ்வு பெற்றுக் கொடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், நீதிமன்றம் இவர்களது புனர்வாழ்வு தொடர்பில் தீர்ப்பளிக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

மோதல் காலங்களில் கைது செய்யப்பட்டவர்களது விசாரணைகளை துரிதப்படுத்தி அவர்களை விடுதலை செய்யும் பணியை துரிதப்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தவிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டினார்.

புனர்வாழ்வளிக்கப்படும் சிறைக் கைதிகள் சுமார் ஒரு வருட புனர்வாழ்வுப் பயிற்சிகளுக்குப் பின்னர் சமூகமயப்படுத்தப்படுவர் என அமைச்சின் செயலாளர் கூறினார். இதனை அமுல்படுத்துவதற்கான பணிகள் எதிர்வரும் ஒருமாத காலப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## சட்டவிரோத ஆஸி. பயணம்: 93 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 93 பேர் நேற்றைய முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் 25 பேர் பேருவளையில் நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேருவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பண்டாரவத்தையின் நில்கோவாடியா பகுதியிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆட்கடத்தல் கும்பலின் தலைவர் என கூறப்படுகின்ற பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார்

02

## கோமா நிலையிலிருந்த தமிழ் கைதி டில்ருக்ஷன் உயிரிழப்பு

ராகம வைத்தியசாலையில் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி மரியாம்பிள்ளை டில்ருக்ஷன் நேற்று முன்தினமிரவு மரணமடைந்தார். அவரது தந்தை இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் டில்ருக்ஷன். அந்த சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் நடத்திய ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது அவர்களால் மூன்று சிறைக் காவலர்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்தனர் அவர்களை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பின்னர் மஹர சிறைச்சாலைக்கு டில்ருக்ஷன் மாற்றப்பட்டிருந்தார்.

02

## கொழும்பு – காங்கேசன்துறை ரயில் பாதை புனரமைப்பு 2014 ஜூனில் பூர்த்தியாகும்

கொழும்பிலிருந்து காங்கேசந்துறை வரையான ரயில் பாதையின் புனரமைப்பு பணிகள் எதிர்வரும் 2014ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலேயே நிறைவு பெறும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஓமந்தை முதல் பளை வரையான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் 2013ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் முடிவடையும். பளை முதல் காங்கேசந்துறை வரையான ரயில் பாதையின் புனரமைப்பு பணிகள் 2014 ஜூனில் நிறைவடையும். அத்துடன், மதவாச்சி முதல் மடு வரையான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் 2013 மார்ச் மாதத்தில் நிறைவடையும் அதேவேளை, மடுவிலிருந்து தலைமன்னார் வரையான ரயில் பாதை புனமைப்பு 2013 செப்டெம்பரில் பூர்த்தியடையும் என்றும் பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டார்.

"நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி" எனும் தொனிப்பொருளில் கொழும்பில் நடைபெற்றுவரும் "இராணுவ கருத்தரங்கு 2012"இல் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



யுத்த அனுபவ மாநாட்டில் அமைச்சர் ஜி.எல், பாதுகாப்புச் செயலருடன் சுப்பிரமணிய சுவாமி

## புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கைகளால் இலங்கைக்கு எதிராக பொருளாதார யுத்தம்

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் காரணமாக இலங்கைக்கு எதிராக பொருளாதார யுத்தமொன்று கட்டவிழ்க்கப்பட்டுள்ளது.

இதனால் வடபகுதிக்கான அபிவிருத்தி திட்டங்கள் பல நேரடியாக பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் யுத்த வெற்றி அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளும் இராணுவ கருத்தரங்கு 2012 நேற்று புதன்கிழமை கொழும்பில் ஆரம்பமானது. இக்கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர்

02

## கட்டுநாயக்காவில் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட யுவதி சுன்னாகத்தில்


### திருமணமாகி குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதாக தகவல்

கடந்த மூன்றாம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சுன்னாகத்தைச் சேர்ந்த இளம்பெண் மறுநாள் நான்காம் திகதி இரவு தனது காதலனுடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு வந்திருந்தாரெனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. பிரான்சில் தனது குடும்பத்தாருடன் வசித்துவந்த குறிப்பிட்ட யுவதி, ஜூன் மாதம் 25ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

விடுமுறையைச் சுன்னாகத்தில் கழித்த பின்னர் மீண்டும் பிரான்ஸ் செல்வதற்காகக் கொழும்புக்கு வருகைதந்த குறிப்பிட்ட பெண் அங்கிருந்து தனது காதலனுடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து தாம் இருவரும் திருமணம் செய்து கொண்டனரெனத் தனது முறைப்பாட்டில் கூறிவிட்டுச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின.

02

## இலங்கை அரசை சாடுகிறார் கருணாநிதி



டெசோ மாநாடு பற்றி இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரத்தை உலகத் தமிழர்கள் நம்ப வேண்டாம் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டெசோ மாநாடு குறித்து இலங்கை அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்கு கலைஞர் பதில் அளித்துள்ளார்.

## இராணுவக் கருத்தரங்கில் இந்திய அக்கறை பற்றி சுப்பிரமணிய சுவாமி உரை

இலங்கையின் யுத்த வெற்றி அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளும் "இராணுவ கருத்தரங்கு" நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ள பாதுகாப்பு உயரதிகாரிகள் விரிவுரைகளை வழங்கவுள்ளனர். இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணியம் சுவாமி இந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு "யுத்தத்துக்கு பின்னரான தீர்மானம் மற்றும் இந்தியாவின் அக்கறை" என்ற தலைப்பில் விசேட உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு இரண்டு வருட பூர்த்தியில் முதலாவது

02

# யாழ்ப்பாணத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன - யாழ்.அரசாங்க அதிபர்

"யாழ்ப்பாணத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் முன்னரை விட இப்போது வெகுவாகக் குறைந்துள்ளன. ஆனால் குற்றவாளிகளை அம்பலப்படுத்தும் நோக்குடன் இதுகுறித்த செய்திகள் முன்னரை விடக் கூடுதலாக யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் வெளிவருவதால் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்திருப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு காணப்படுகிறது" என்று யாழ்ப்பாண அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

சிறுவர் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்.மாவட்டப் பத்திரிகை ஆசிரியர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அப்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே யாழ்.அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு சொன்னார்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களில் சம்பந்தப்படும் குற்றவாளிகள் அம்பலப்படுத்தப்படுவதால் இவ்வாறான அக்கிரமங்கள் குறைவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன என்றும் சொன்னார். அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்:-

பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமிகளின் பெயர், விபரங்களை வெளியிடுவதைப் பத்திரிகைகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான செய்திகள் வெளிவரும்போது அது சம்பந்தப்பட்ட சிறுவர், சிறுமிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் கூடப் பெரும் பாதிப்பாக அமையும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் குறித்து நூறு சதவீதம் அக்கறையோடு செயற்பட வேண்டும். அதுமட்டுமன்றி சமூகத்தில் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு ஊடகங்களைச் சார்ந்தது.

யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு தொடர்ச்சியாகப் பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடி சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளைத் தீவிரமாக்கவுள்ளது.

குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் போதும், அவை குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளிவரும் போதும் அவை சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பாரிய பங்களிக்கின்றன. இதற்காக நான் வாராவாரம் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவுள்ளேன் என்றும் யாழ்.அரசாங்க அதிபர் கூறினார்.

## ஜீ.சீ.ஈ. பரீட்சை நிலையங்களுக்கு வெளியார் செல்லத் தடை

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்கும் பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கும் வெளியார்கள் எவரும் செல்லாதபடி தடை விதிக்கப்பட்டிருப்பதாகப் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்ப குமார தெரிவித்தார்.

பரீட்சார்த்திகளைத் தவிர வேறு எவரும் செல்ல முடியாதபடி இந்தத் தடை கடுமையாக அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் சொன்னார். தேவையற்ற சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்காகவே இந்தக் கடுமையான வீதி பின்பற்றப்படுவதாகவும் அவர் சொன்னார்.

## தரம்குறைந்த பெற்றோலை வழங்கிய கம்பனி இப்போதும் முக்கிய விநியோகஸ்தர்

தரம் குறைந்த பெற்றோலைக் கடந்த வருடம் ஜூன் மாதம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய ஐக்கிய அரபு எமிரேட்டிலுள்ள தேசிய எண்ணெய் கம்பனி இப்போதும் பெற்றோலியப் பொருட்களை இலங்கைக்கு வழங்கும் முக்கிய கம்பனியாகத் தொடர்ந்தும் உள்ளது.

பெற்றோலிய அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இத்தகவலைத் தெரிவித்தார். கடந்த வருடம் தரம் குறைந்த பெற்றோலை வழங்கியதற்காக அந்தக் கம்பனியிடமிருந்து நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தையில் இன்னமும் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

கடந்த வருடம் இந்தத் தரம் குறைந்த பெற்றோலைப் பயன்படுத்தியதால் பழுதடைந்த வாகனங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க நான்கு கோடி ரூபா அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருந்தது.

## ஐ.தே.க. யாப்பு திருத்தத்திற்கு நீதிமன்றம் தடை உத்தரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் 6 வருடங்களுக்கு ஒரு தடவை தெரிவு செய்யப்படுமெனக் கூறும் திருத்தப்பட்ட கட்சி யாப்பின்படி செயற்படுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு ஐக்கிய தேசிய கட்சிக்கு கல்கிஸை மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு வழங்கியுள்ளதாக அக்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ண தெரித்தார்.

ஐ.தே.க. யாப்பில் புதிய திருத்தங்கள் ஏன் அறிமுகப்படுத்தப்பட்டன என்பதை தெரிவிப்பதற்காக ஐ.தே.க. செயற்குழு உறுப்பினர்களை ஓகஸ்ட் 22 ஆம் திகதி நீதிமன்றில் பிரசன்னமாகுமாறும் நீதிபதி ஜூட் பிரியந்த பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

ஐ.தே.க. யாப்பு திருத்தங்கள் செல்லுபடியற்றவை என அறிக்குமாறு கோரி மைத்திரி குணரட்ன மற்றும் இரு சட்டத்தரணிகள் கல்கிஸ்ஸை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவலேயே நீதிமன்றம் இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளது.

## தமிழகத்தில் இலங்கைப் படை இல்லை

தமிழ்நாட்டில் இலங்கை இராணுவ வீரர்களுக்கு முன்னர் பயிற்சி அளிக்கப்பட்டது. எனினும் தற்போது இலங்கை இராணுவ வீரர்கள் எவரும் தமிழ்நாட்டில் இல்லை என இந்திய மத்திய அரசு ராஜ்யசபாவில் தெரிவித்துள்ளது. எழுத்து மூலம் அனுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு ராஜ்யசபையில் நேற்றுப் பதிலளித்த இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி இதனைத் தெரிவித்தார்.

## இலங்கை அகதிகள் முகாம்களுக்கு பாதுகாப்பு

தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்களின் அகதிகள் முகாம்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசு சார்பில், முகாம் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் தமிழ் அகதிகள் முகாமில் 4 பேர் உயிரிழந்தது மற்றும் சிலர் தப்பிச் செல்ல முயன்ற சம்பவங்களைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் மீண்டும் முடக்கம்

நுரைச்சோலை லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் மின்னுற்பத்தி நடவடிக்கை தானாக நின்றுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நுரைச்சோலைக்கும் வெயாங்கொடைக்கும் இடையிலான மின் விநியோகத் தொடரில் ஏற்பட்ட கோளாறே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை விரைவாக மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விமலதர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் தமிழர்களின்... (தொடர்)

மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இலங்கைக்கு எதிராக வர்த்தகத் தடைகளை விதிக்குமாறு சர்வதேச நாடுகளை மேற்படி புலம்பெயர் தமிழர்கள் தூண்டிவிடுகின்றார ் கள்.

இதன்மூலம், இலங்கையின் நிலைமையை சர்வதேசமயப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவம் முற்றாக வெளியேறாது. நாம் கடந்த கால வரலாற்றை எப்போதும் மறந்துவிட முடியாது. மீண்டுமொரு யுத்த சூழ்நிலைக்குள் செல்ல நாம் தயார் இல்லை.

இலங்கைக்கு எதிராக பிரச்சினைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. சர்வதேசத்தின் முன்னால் இலங்கையை ஒரு குற்றவாளியாக நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில், இந்த இராணுவ கருத்தரங்கு நடத்தப்படுவது மிகவும் உகந்ததே" என்றார்.

## சட்டவிரோத ஆஸி... (தொடர்)

தெரிவித்துள்ளனர். இவர் மொரட்டுவை சேர்ந்தவர் என அறியப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை, காலி மாவட்டத்தின் கரையோரப் பகுதியான கொஸ்கொடப் பகுதியில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் மேலும் 68 பேர் நேற்று புதன்கிழமை காலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 2 பெண்களும் 3 சிறுவர்களும் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## கட்டுநாயக்காவில் கடத்தப்பட்டதாக.. (தொடர்)

சுன்னாகம், சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த குறித்த யுவதி, மீண்டும் பிரான்ஸ் செல்ல விரும்பாமல் தனது காதலனைத் திருமணம் செய்து வாழவே விரும்பினாராம். பிரான்ஸ் செல்வதற்காகக் கட்டுநாயக்கா வுக்கு வந்த குறிப்பிட்ட யுவதி கடத்தப்பட்டாரென்று ஊடகங்களில் வெளிவந்த செய்தி தவறானதென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இரும்பு சேகரிக்கச் சென்ற இளைஞர் காலை இழந்தார்

### இத்தாவிலில் பரிதாபம்

முகமாலை, இத்தாவில் பகுதியில் மிதிவெடியில் அகப்பட்ட இளைஞர் ஒருவரின் கால்பாதத்தை சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றியுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தனது நண்பர்களுடன் இரும்பு சேகரிப்பதற்காகச் சென்ற மேற்படி இளைஞர் கண்ணிவெடியில் அகப்பட்ட நிலையில், பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பளை வைத்தியசாலையிலிருந்து இவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

முகமாலை இத்தாவில் பகுதியைச் சேர்ந்த பரராஜசிங்கம் கபில்ராஜ் (வயது 18) என்பவரே மிதிவெடியில் அகப்பட்டு தனது கால்பாதத்தை இழந்துள்ளார்.

## கோமா நிலையிலிருந்த.. (தொடர்)

பின்னர் கோமா நிலையில் றாகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் மரணமாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவரது மரணம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் மகனின் சடலத்தை தமது சொந்த ஊராகிய யாழ்ப்பாணம் பாசையூருக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அவரது தந்தையார் தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலை சம்பவத்தையடுத்து வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த கணேசன் நிமலரூபன் என்ற கைதி கடந்த மாதம் 4ஆம் திகதி றாகம வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

## இராணுவ கருத்தரங்கில்.. (தொடர்)

கருத்தரங்கு கடந்த வருடம் நடத்தப்பட்ட நிலையில் அதன் போது யுத்தத்தின் போதான படைத்தரப்பினரின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

இருப்பினும் இம்முறை புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள் ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் என்ற அடிப்படைகளில் இந்த மூன்று நாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

## இணைந்த கணிதம் 2 ஆம் பிரிவு வினாப்பத்திரத்திலும் தவறுகள்

உயர்தர பரீட்சைக்கான இணைந்த கணித பாடத்தின் இரண்டாம் பிரிவு வினாப்பத்திரத்திலும் தவறுகள் காணப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

வினா இலக்கம் 12 தவறாக இருந்ததாகவும் ஆகையால் பரீட்சைகள் திணைக்களம் மாற்று வினாவைக் வழங்கியதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் மஹிந்த ஜயசிங்க கூறினார்.

இணைந்த கணித பாடத்தின் வினாப்பத்திரம் 1இல் இதே போன்ற தவறுகள் காணப்படுவதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. முறைப்பாடுகளை அறிக்கை ஏற்றுக்கொண்டால் அவ்வினாவுக்கு விடையளித்த அனைவருக்கும் பூரண புள்ளிகளை வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் உறுதியளித்திருந்தார்.

# அதிகாரிகளின் கவனயீனத்தால் மீண்டும் எரிபொருள் பிரச்சினை

## அனுரகுமார எம்.பி

தலைவர்கள் மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகளின் மெத்தனப் போக்கினால் மீண்டும் ஒருமுறை நாட்டில் தரக்குறைவான எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டுள்ளதென ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் விசேட உரையொன்றை ஆற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொள்வனவு செய்யப்பட்ட டீசலில் எந்தப் பிரச்சினையும் இல்லை என அரசாங்கமும் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் கூறிவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனங்களை பழுதாக்கிய டீசலை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அதில் எந்த சிக்கலும் இருக்கவில்லை என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளதென அநுரகுமார கூறியுள்ளார்.

எனினும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்பட்ட டீசலை பயன்படுத்திய வாகனங்கள் நடு வீதியில் நின்று விடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் கருத்துக்கு பதிலளித்த கனியவள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, தரக்குறைவானதென கருதப்படும் டீசல் வெளிநாட்டுக்கு பரிசோதனைக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

# பிரசாரங்களில் கொள்கைகளை முன்வைக்காத அரசியல் கட்சிகள்

## கண்காணிப்பாளர்கள் விமர்சனம்

தேர்தல் பிரச்சாரங்களில் அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளை முன்வைக்கத் தவறுகின்றன என தேர்தல் கண்காணிப்பாளர்கள் விமர்சித்துள்ளனர். தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள நடத்தைக் கோவையில் கொள்கைகளை முன்வைப்பதும் நிபந்தனையாக்கப்பட வேண்டும் எனவும் கண்காணிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

வேட்பாளர்கள் வாக்குறுதிகளை பற்றிதான் அடிக்கடி பேசுகிறார்களே தவிர, கொள்கைகளை பற்றியல்ல. ஆனால் அவர்கள் கொள்கைகளை பற்றி பேச வேண்டும். அத்துடன் நீதியான நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு இவ்விடயம் நடத்தைக் கோவையில் உள்ளடக்கப்படுவது அவசியம் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டி பாராச்சி கூறினார்.

வாக்குகளுக்காக ஆயிரக்கணக்கான ரூபாவை மதுபானத்திற்கும் மதிய உணவுப் பொதிகளுக்கும் செலவிடுவதை தவிர்ப்பதும் நடத்தைக் கோவையில் உள்ளடக்கப்பட வேண்டும். அவர்கள் சட்டபூர்வமான அல்லது சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருக்கவும் கூடாது என்றார்.

# திருமுறிகண்டி கோயில் குறித்த வழக்கு ஜனவரி 23 இல்

முறிகண்டி பிள்ளையார் ஆலய பிரச்சினை பற்றிய மனித உரிமைகள் மனு ஜனவரி 23இல் கவனத்தில் எடுக்கப்படுமென உயர் நீதிமன்றம் அறிவித்தது.

ஆலயத்தின் பரம்பரை தர்மகர்த்தாவான ஜி.மணிவண்ணன் தாக்கல் செய்தமனு, நீதிபதிகள் ஷிரானி திலகவர்த்தன, எஸ்.ஐ.இமாம், பியசத் தெப் ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழாமின் முன் வந்தது.

திருமுறிகண்டி பக்தர்கள் மன்றத்தின் தலைவர் திருநாவுக்கரசு, செயலாளர் வி.நாகராசா ஆகியோர் தலையிட்டு விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஆலய பக்தர்களின் பிரதிநிதிகளாலான ஒரு சுயாதீனமான முகாமைத்துவ சபை இக்கோயிலை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட வேண்டுமென இந்த விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ளது.

# கனடா வாகன விபத்தில் இலங்கை தந்தையும், மகளும் பலி

கனடாவின் தேசிய நெடுஞ்சாலை 427 QEW இல் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட தந்தை மற்றும் மகள் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். கடந்த 5ஆம் திகதி ஞாயிறு அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காரில் சென்றுகொண்டிருந்த ஒரு குடும்பத்தினர் எதிரே வந்த மற்றொரு வாகனம் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் தந்தை மற்றும் மகள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இறந்த பெண்ணின் தாயார் எனக் கருதப்படும் ஒருவர் படுகாயத்துடன் மீட்கப்பட்டு சன்னிபுரூக் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக சென்று கொண்டிருந்த வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

# உமையாளினி முதலிடம்

(தெல்லிப்பழை)

யா/அருணோதயக் கல்லூரி மாணவியான தேவதாசன் உமையாழினி குறுநாடகப் பிரதியாக்கம் பிரிவு Iஏ இல் தேசியமட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இவர் கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தினக் கட்டுரையாக்கப் போட்டியில் பிரிவு III இல் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்.எயிட் நிறுவனத்தினால் மிருசுவிலில் மாணவர்களுக்கு உபகரணம் வழங்கல்

(மாவிட்டபுரம்)

யாழ்.எயிட் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினரால் மிருசுவில் கெற்போலி அ.த.க. பாடசாலையில் கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர் பி.நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் ஈழத்தமிழர் கழக சிட்னி கிளை ஆதரவுடன் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டுக்கான பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக சமூக சேவையாளரும் லண்டன் வாழ் புலம்பெயர் தமிழருமான திருமதி உமாசுதன் விஜயநந்தினி தம்பதிகள் மற்றும் திருமதி இ.செல்வலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

மேலும் கிழக்க மாகாண பாடசாலைகளில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்க வழங்கவென ஒரு தொகுதி கற்றலுக்கான உதவிப்பொருட்கள் பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டன. திருகோணமலை சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து மூதூர் சேனையூரில் இயங்கும் சம்பூர் மகாவித்தியாலயம் மற்றும் மட்டக்களப்பு ஆனைப்பந்தி விவேகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இதன் போது கற்றல் மேம்பாட்டு உபரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# சட்டவிரோதமான மதுபானம், சிகரெட் விற்பனை: முப்பது பேருக்கு அபராதம்

21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகரெட்டுக்களை விற்பனை செய்தமை, அனுமதிப் பத்திரமின்றி மதுபான வகைகளை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதுசெய்யப்பட்ட 30 பேருக்கு 67,500 ரூபா அபராதம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விதிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் மதுவரித் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தினரால் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போதே, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.மகேந்திரராஜா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகரெட்டுக்களை விற்பனை செய்த 15 பேரில் தலா ஒவ்வொருவருக்கும் 2,500 ரூபா அபராதமும் அனுதிப்பத்திரமின்றி கள்ளு விற்பனை செய்த 10 பேரில் தலா ஒவ்வொருவருக்கும் 500 ரூபா அபராதமும் அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த 2 பேருக்கு 25,000 ரூபா அபராதமும் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

மேலும் நீதிமன்றத்திற்கு சமூகம ளிக்காத 3 பேருக்கு நீதவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் புங்குடுதீவு, வேலணை ஆகிய பகுதிகளில் இம்மாதத்தின் முதல் வாரத்தில் மதுவரித் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகரெட்டுக்களை விற்பனை செய்தமை, அனுமதிப் பத்திரமின்றி மதுபான வகைகளை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் 30 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

# தெல்லிப்பழையில் ஆடிச்செவ்வாய் உற்சவம்

(மாவிட்டபுரம்)

வரலாற்றுச்சிறப்பு மிக்க சக்தி தலங்களில் ஒன்றாகிய தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 4ஆம் ஆடிச்செவ்வாய் உற்சவம் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

சக்திக்குரிய விரதங்களில் சிறப்பிற்குரிய விரதமாக பெண்களால் பெரிதும் அனுஷ்டிக்கப்படும் ஆடிச்செவ்வாய் உற்சவத்தின் சிறப்பு பூசை நிகழ்வுக் ஆலயத்தில் இடம்பெற்று மாலை நேர விசேட உற்சவமாக 5மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்று துர்க்கையம்மன் வீதி உலாவந்தார்.

இவ் ஆடிச்செவ் வாய் விசேட உற்சவ பூசையில் பெருந்திரளான அடியவர்கள் கலந்து கொண்டு தங்களது நேர்த்திகளையும் வேண்டுதல் களையும் நிறைவேற்றினார்கள்.

# மது போதையில் கடமை 5 பொலிஸ்காரர் பணிநீக்கம்

கடமை நேரத்தில் மது போதையில் இருந்தமை, கடமையை செய்யத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பணிநீக்கம் உடன் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளன. 2012-08-06 அன்று இரவு மிஹிந்தளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் கான்ஸ்டபிள் சாரதி ஆகியோர் நடமாடும் பணியில் அமர்த்தப்பட்டனர்.

இவர்கள் மது போதையில் இருப்பதாக அநுராதபுரம் பொலிஸ் அதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து பதில் பொலிஸ் அதிகாரி ஒருவரை அவ்விடத்திற்கு அனுப்பி சோதனை செய்த போது இரு கான்ஸ்டபிள்கள் மது போதையில் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# புதையல்: 7 பேர் கைது

புராதன இடமொன்றில் புதையல் தோண்டச் சென்ற ஏழு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 01.15 அளவில் கைது செய்யப்பட்ட இவர்களில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் பூசாரி ஒருவரும் அடங்குகின்றனர்.

இராணுவ சிப்பாய் விடுமுறையில் சென்றுள்ள வேளையில் இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்கள் குருநாகல், பொத்துஹெர, ஆனமடுவ, ஹோமாகம மற்றும் திம்புலாகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

# இன்றைய இராசி பலன் (09.08.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 25 ஆம் நாள்**
**வியாழக்கிழமை**

**நட்சத்திரம்** : பரணி (நாள் முழுவதும்)
**திதி** : ஸப்தமி பிற்பகல் 12.36 வரை அதன்பின் அட்டமி
**சுபநேரம்** : 7.34 - 9.04
**இராகுகாலம்** : 1.34 - 3.04
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : ஏமாற்றம், மனச்சஞ்சலம், பிரயாசை மிகுதி
**இடபம்** : வீண்விரயம், பொருள் இழப்பு, பிரயாணக் கஷ்டம்
**மிதுனம்** : பொருள் இலாபம், பெரியோர் மதிப்பு, மனச்சந்தோசம்
**கடகம்** : வீண்யோசனை, வருவாய் குறைவு, தொழில் சிரமம்
**சிங்கம்** : பொருட்சேர்க்கை, பூமிஇலாபம், தந்தை வழி உறவு
**கன்னி** : வீண் பிரச்சினை, சத்துருபயம், போக்குவரத்தில் கவனம் தேவை
**துலாம்** : விவாக முயற்சி, விருந்தினர் வருகை, நண்பர் உதவி
**விருச்சிகம்** : காரியத்தடை, யோசனை மிகுதி, போசன சுகக் குறைவு
**தனுசு** : நற்காரியம் விருத்தி, பொருட்சேர்க்கை, புத்திரரால் நன்மை
**மகரம்** : இல்லச்சிறப்பு, வாகனசுகம், தாய்வழி நன்மை
**கும்பம்** : முயற்சி வெற்றி, உடற்சோர்வு, சகோதரரால் சஞ்சலம்
**மீனம்** : வீண்விரயம், பிரயாணக்கஷ்டம், தூக்கக் குறைவு

**- ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# இரணைமடுக் குளத்தில் நீர் மட்டம் குறைந்தாலும் விவசாயிகளுக்கு பாதிப்பில்லையாம்

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் நீர்மட்டம் குறைவடைந்திருந்தாலும் தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு நீர் விநியோகிக்கப்படுவதாக கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்தார்.

மழை வீழ்ச்சி குறைவடைந்ததால் இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இருந்தாலும் இயலுமானளவு நீர் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது. இரணைமடுக் குளத்தின் நீர் விரயமாக வெளியேற்றப்பட்டமையால் தற்போது விவசாயிகள் பாதிக்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச் சாட்டில் எவ்வித உண்மையுமில்லை.

இராணுவ முகாம் மற்றும் இரணைமடு விமான ஓடு தளத்துக்காக இரணைமடுக் குளத்தின் நீர் வீண் விரயமாகத் திறந்து விடப்பட்டு போதியளவு நீர் தேக்கி வைக்கப்பட வில்லை. இதனால் விவசாயிகள் நீரின்றி பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர். இவ்வாறான குற்றச் சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் சுதாகரன் குறிப்பிட்டார்.

# சிறுவர் சேமிப்பில் சாதனை: 28 மாணவர்கள் கௌரவிப்பு

(பருத்தித்துறை)

நெல்லியடி கொமேர்சல் வங்கி சிறுவர் சேமிப்பு கணக்கு வைத திருந்து சாதனை நிகழ்த்திய 28 மாணவர்களைப் பாராட்டிக் கௌரவித்து பரிசில்களை வழங்கியுள்ளது. வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எஸ். கெங்காதரன் தலைமையில் வங்கியில் இக் கௌரவிப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவிலே கொமேர்சல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.ரஜீவன், நெல்லியடி கொமேர்சல் வங்கி முகாமையாளர் எஸ்.கஜரூபன் ஆகியோர் உரையாற்றினர்.

இவ்விழாவிலே வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலமான 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாமிடத்தைத் தட்டிச் சாதனை நிலைநாட்டிய செல்வன் பீ.சேதுராகவன் கொமேர்சல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ரஜீவனால் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டார். கொமேர்சல் வங்கி சேதுராகவனின் சேமிப்புக் கணக்கில் 60,000 ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. வங்கி உத்தியோகத்தர் செல்வி பீ.பாரதி நன்றியுரை நிகழ்த்தினார்.

# தம்பசெட்டி சிக்கனக் கூ.சங்கத்தின் வெள்ளி விழாவும் மலர் வெளியீடும்

(வடமராட்சி)

புலோலி மேற்கு தம்பசெட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் 25 வருட நிறைவு விழாவும் மலர் வெளியீடும் எதிர் வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே. தங்கராஜா தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிச் சிறப்புரையாற்றுவார்.

வெள்ளிவிழா மலர் வெளியீட்டுரையை அதிபர் பீ.செல்வநாயகம் நிகழ்த்துவார். வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவிச் செயலாளர் செல்வி உமா தங்கவேல் மலர் ஆய்வுரை நிகழ்த்துவார். மலர் ஆசிரியர் தர்மலிங்கம் ஏற்புரை நிகழ்த்துவார்.

சமூகசேவையாளர்கள், மூத்தோர் கௌரவிப்புகளும் பரிசில் விருதுகளும் வழங்கலும் இடம் பெறும்.

# பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(உடுவில்)

ஐயாயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தலா ஐந்து இலட்சம் ரூபாவை இந் நிதி ஒதுக்கீடு உள்ளடக்கியுள்ளது.

இடம்பெயர்ந்து உரும்பிராயில் இயங்கி வரும் யாழ்.வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம், யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம் இத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதன் கீழ் பாடசாலகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

# பொலிகண்டியில் இரு படகுகளுக்கு தீ வைப்பு

(வல்வெட்டித்துறை

பொலிகண்டி மாதா கோயில் பகுதியில் கடந்த 5ஆம் திகதி இரண்டு படகுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. 2004ஆம் ஆண்டு சுனாமியினால் சேதமான படகுகளை திருத்தும் பணியில் உலக தரிசனம் நிறுவனம் ஈடுபட்டிருந்தது. எனினும் ஏழு படகுகள் உரிமை கோரப்படாத நிலையில் திருத்தப்படாது வைக்கப்பட்டிருந்தது.

இதில் இரண்டு படகுகளே விஷமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# தீவகக் கல்வி வலயப் போட்டி முடிவுகள்

(உடுவில்)

தீவகக் கல்வி வலய மட்ட வணிகப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தீவக வலயக் கல்விப் பாடசாலைகளுக்கு இடையில் அண்மையில் நடத்தப்பட்ட வணிகத் துறைசார் போட்டிகளில் முதல் மூன்று இடங்களினையும் பெற்றோர் விபரம் வருமாறு:

குறுவினை விடைப் போட்டியில் தரம் 10 இல் முதலாமிடம் ஆ.காயத்திரி (யா/ காரைநகர் யாழ்ரன் கல்லூரி), இரண்டாமிடம் ஜெ.நிதர்சன் (யா/வேலணை மத்திய கல்லூரி), மூன்றாமிடம் அ.சசிப்பிரியா (யா/ காரை நகர் யாழ்ரன் கல்லூரி) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

தரம் 11இல் முதலாமிடம் சி.சரவணன் (யா/காரைநகர் யாழ்ரன் கல்லூரி), இரண்டாமிடம் க.சாந்தினி (யா/காரைநகர் கலாநிதி ஆ.தியகராசா மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் கோ.கஸ்தூரி (யா/காரைநகர் கலாநிதி ஆ.தியகராசா மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோருக்குக் கிடைத்தது.

தரம் 12, 13இல் முதலாமிடம் ஜீ.நிரோஜன் (யா/ வேலணை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் பா.துஷாரா (யா/ வேலணை மத்திய கல்லூரி), த.உமாசுகி (யா/ காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரும்,

கட்டுரைப் போட்டியில் தரம் 10 இல் முதலாமிடம் கா.டிலானி (யா/ காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் ம.சிவகௌரி (யா/ காரை நகர் யாழ்ரன் கல்லூரி) ,மூன்றாமிடம் த. ஆரணி (யா/ காரைநகர் யாழ்ரன் கல்லூரி) ஆகியோரும்,

தரம் 11இல் முதலாமிடம் (யா/ வேலணை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் அ.திவ்ஜா (யா/ காரைநகர் யாழ்ரன் கல்லூரி) மூன்றாமிடம் தே.றோயனா (யா/ காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

தரம் 12, 13இல் முதலாமிடத்தினை இ.சிறிவதனா (யா/ வேலணை மத்திய கல்லூரி), இரண்டாமிடம் தி.கஜலக்சுமி (யா/ வேலணை மத்திய கல்லூரி), மூன்றாமிடம் சி.யசோதரா (யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

பேச்சுப் போட்டியில் தரம் 10 இல் முதலாமிடம் ஜீ.றஜீவன் (யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி), இரண்டாமிடம் த.ஆரணி (யா/ காரை நகர் யாழ்ரன் கல்லூரி) மூன்றாமிடம் சி.தேவப்பிரியன் (யா/ வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரும்,

தரம் 11 இல் முதலாமிடம் க.யசோதா (யா/ காரை நகர் யாழ்ரன் கல்லூரி) இரண்டாமிடம் க.கம்சா (யா/ வேலணை மத்திய கல்லூரி), மூன்றாமிடம் வி.டேனுசா (யா/வேலணை மத்திய கல்லூரி ஆகியோரும்,

தரம் 12, 13இல் யா/ வேலணை மத்திய கல்லூரி மாணவர்களான க.செந்தூரி முதலாமிடத்தையும் சு.கஜமுகன் இரண்டாமிடத்தையும் தி.கஜலக்சுமி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளார்கள்.

இவர்கள் மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாளை மறுதினம் சமுர்த்திச் சங்கங்கள் அங்குரார்ப்பணம்

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் நான்கு சமுர்த்திச் சங்கங்களும் மூன்று மாகசங்கங்களும் உட்பட ஏழு சமுர்த்திச் சங்கங்கள் நாளை மறுதினம் 10ஆம் திகதி உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாண சமுர்த்தி மகா சங்கம், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் அளவெட்டி சமுர்த்தி வங்கிச் சங்கம், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி மகா சங்கம் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கம், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உடுப்பிட்டி சமுர்த்தி வங்கிச் சங்கம், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மருதங்கேணி சமுர்த்தி மகா சங்கமும் அம்பன் சமுர்த்தி வங்கிச் சங்கம் என்பன ஒரே நாளில் திறந்துவைக்கப்படவுள்ளன.

மேற்படி இந் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இச் சமுர்த்தி வங்கி மற்றும் சமுர்த்தி மகா சங்கம் ஆகியவற்றை அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவுகளில் திறந்து வைப்பர்.

# தாதியர் பயிற்சி தேர்வுக்கு தோற்றியோருக்கு

## நாளை கலந்துரையாடல்

கடந்த ஆண்டு (2011) நடைபெற்ற தாதியர் பயிற்சிக்கான நேர் முகத் தேர்விற்கு தோற்றியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை (10.08.2012) காலை 9.00 மணிக்கு யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வில் பங்குபற்றி, தகுதியிருந்தும் நியமனம் கிடைக்காத அனைவரையும் மேற்படி பாடசாலையில் ஒன்றுகூடுமாறு வட மாகாண கல்வி அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது.

வருகை தருவோர் நேர்முகத தேர்வுக்காக கிடைக்கப்பெற்ற கடிதம் மற்றும் கல்வி சான்றிதழ்களை எடுத்துவர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டிடத் திறப்பு விழாவை வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சில்வஸ்ரர் அலன்ரீன் (உதயன்) வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் ஆகியோரையும் கட்டடத்தைத் திறந்து வைத்த அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.கிருஸ்ணலிங்கம் பொன்னாடை போர்த்திப் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(பருத்தித்துறை நிருபர்)

### 1994 தேர்தல் விவகாரம்:

# ஐ.தே.க.வின் சவாலை ஏற்றுக்கொள்ள அமைச்சர் மைத்திரிபால தயாராம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்துள்ள சவாலை ஏற்றுக் கொள்ள தான் தயார் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் சவாலை ஏற்றுக் கொண்டார்.

1994 தேர்தலில் ஐதேக வேட்பாளராக போட்டியிட்ட காமினி திஸாநாயக்க வெற்றிபெற கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உதவிபுரியவில்லை என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் குறிப்பிட்டார்.

முடிந்தால் அக்கருத்தை உறுதி செய்யுமாறு திஸ்ஸ அத்தநாயக்க மைத்திரிபால சிறிசேனவிடம் சவால் விடுத்திருந்தார்.

இது குறித்த எழுத்து மூலமான ஆவணமும் தன்னிடம் உள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அன்று பொலிஸில் பணிபுரிந்த ஒருவருடைய வாக்குமூலமும் தன்னிடம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்கவின் சவாலை தான் ஏற்றுக் கொள்வதாகவும் அதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்படும் பாதிப்புக்கு தன்னால் பொறுப்புக்கூற முடியாதெனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரட்டைவேடம் போடுகிறது

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

காவியுடை பயங்கரவாதத்தை ஜனாதிபதி தோற்கடிக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியதை ஜாதிக ஹெல உறுமய விமர்சித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவதாக ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது.

பயங்கரவாதத்தை வெற்றிகரமாக தோற்கடித்த ஜனாதிபதி, அதேபோன்று சகல பயங்கரவாதங்களையும், அது காவியுடை பயங்கரவாதமாயினும் தோற்கடிப்பது வரவேற்கத்தக்கது என தெரிவித்திருந்தார்.

ஹக்கீமின் இந்த குற்றச்சாட்டு, அவரின் இரட்டை வேடத்தையும் அவரது கட்சியின் கபடத்தனத்தையும் பிரதிபலிப்பதாக உள்ளது என ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த மேல்மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.

கொழும்பில் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் ஹக்கீம் பேசும்போது, பௌத்த பிக்குகளுக்கும் முஸ்லிம் பாரம்பரியத்திற்கும் இடையில் உள்ள பாரம்பரியமான நட்பை பற்றி பேசுவார். ஆனால் கிழக்கில் தமிழில் பேசும்போது அதே பௌத்த பிக்குகளை விமர்சிப்பார் என உதய கம்மன்பில கூறினார்.

# இன்று தரக்குறைவான பெற்றோல் நாளை நாட்டின் பொருளாதாரம்

### ஐ.தே.க.

தரக்குறைவான டீசல் கொள்வனவின் மூலம் ஏற்பட்டுள்ள நட்டத்தை அரசாங்கம் பொது மக்கள் தலையில் சுமத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

1994ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாட்டிற்கு லாபம் பெற்றுத்தரும் பிரதான நிறுவனங்களில் ஒன்றாக இருந்ததாகவும் அதன் பின்னர் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைந்து மோசடி, ஊழல் நிறைந்த நிறுவனமாக மாறியுள்ளதெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தரக்குறைவான பெற்றோல், தரக்குறைவான கல்வி, தரக்குறைவான பரீட்சை என வழங்கி வந்த அரசாங்கம் தற்போது தரக்குறைவான டீசலை வழங்கி நாட்டின் முழு பொருளாதாரத்தையும் தரக்குறைவானதாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

தரக்குறைவான டீசல் இறக்குமதி செய்யப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, டீசல் இறக்குமதிக்கும் தனக்கும் தொடர்பில்லை எனக்கூறி முன்னாள் அதிகாரிகள் தலையில் அதனை சுமத்த முயற்சிப்பதாக திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொலிஸின் காதைக் கடித்து குதறிய பொது மகன் கைது

பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் காது பிரிதொரு நபரால் கடித்து காயப்பட்டுத்தப்பட்டுள்ளது.

பலாங்கொடை நகர பஸ் தரிப்பிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளை நோக்கிப் பாய்ந்த ஒருவர் அவரது காதை கடித்து அதில் ஒரு துண்டை அகற்றி எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பலாங்கொட வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் அவர் மீது நடவடிக்கை எடுக்கவும் பொலிஸார் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பலாங்கொடை நகர பஸ் தரிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரை காதைக் கடித்துக் குதறிய நபர் மன வளர்ச்சி குன்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரை தாக்குதல், அவரின் கடமைக்கு இடையூறு விளைவித்தல் என்பன சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம். ஆதலால் கைது செய்யப்பட்டவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பலாங்கொடைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சைக்கிள் திருட்டு

(வலிகாமம்)

ஆலயத்திற்கு வழிபடச்சென்ற பெண்ணின் சைக்கிளை திருடர்கள் திருடிச் சென்ற சம்பவம் சண்டிலிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தில் வழிபாட்டிற்க்குச் சென்ற பெண்ணின் சைக்கிளே திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

ஆலய முன்றலில் நிறுத்தி விட்டு ஆலயத்தினுள் சென்று வழிபட்டுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிள் திருடப்பட்டதைத் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார். சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளே திருடப்பட்டுள்ளது.

# நாணயத்தாள்கள் அச்சிடுவது குறித்து பிரிட்டனிடம் ஐ.தே.க.முறைப்பாடு

பிரித்தானிய பங்கு பரிவரத்தனை கம்பனியான "டி லா றூ" வுக்கு எதிராக பிரித்தானிய உயர்ஸ்தானிகரலாயத்தில் ஐக்கிய தேசிய கட்சி புகார் செய்யவுள்ளது.

'டி லா றூ' இலங்கையில் நாணயத்தாள்களை அச்சடிப்பதற்காக நிறுவப்பட்ட கம்பனியாகும். இதனால் அந்நிய செலாவணியை மீதப்படுத்த முடியுமெனவும் வேலை வாயப்புகள் உருவாகும் எனவும் கருதப்பட்டது. ஆனால் அண்மைக் காலத்தில் ஒரு லத்தீன் அமெரிக்கா நாட்டிலிருந்து நாணய தாள்களை இறக்குமதி செய்வதற்கான ஒரு ஒப்பந்த வேலையை மத்திய வங்கி இந்த கம்பனிக்கு வழங்கியுள்ளது. அத்துடன் இந்த வேலைக்கான கேள்விப் பத்திரமும் கோரப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

இது ஒரு பிரித்தானிய பங்கு பரிவர்த்தனை கம்பனியாகும். எனவே இக்கம்பனி அந்த நாட்டின் ஊழல் சட்டத்தின் கீழ் வருகின்றது. எமக்கு இந்து கொடுக்கல் வாங்களில் மிகுந்த சந்தேகம் உள்ளது. இந்த விடயத்தில் மத்திய வங்கிக்கு இலஞ்சம் அல்லது தரகு வழங்கப்பட்டதா என அறிய விரும்புகிறோம் என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இந்த விடயத்தையிட்டு நாம் பிரித்தானிய உயர்ஸ்தானிகரலாயத்துடன் பேசவுள்ளோம் என அவர் கூறினார்.

இப்படியான நாணயத்தாள் இறக்குமதி எதுவும் நடக்க வில்லையென மத்தியவங்கி ஆளுநர், அஜித் நிவாட் கப்ரால் கூறினார்.

நாம் விரும்பினால் எந்த நாட்டிலும் நாணய தாள்களை அச்சிடமுடியும். இது சட்டத்துக்கு முரணானது அல்ல. இருப்பினும் நாம் அப்படி செய்யவில்லை. இது முழுப்பொய். நாம் டி லா றுவைக் கொண்டு இலங்கையில் நாணய தாள்களை அச்சடித்தோம் என அவர் கூறினார்.

# அரியாலை கிழக்கில் ரூ.1.5 மில்லியன் செலவில் இளைப்பாறும் மண்டபம்

அரியாலை கிழக்கு மீனவர்களின் நன்மைகருதி 1.5 மில்லியன் ரூபா செலவில் இளைப்பாறும் மண்டபம் அமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டில் கடற்றொழில் அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த இளைப்பாறும் மண்டபம் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட அரியாலை கிழக்குப் பகுதி மக்கள் கடற்றொழிலையே மேற்கொண்டுவருகின்றனர்.

இவர்களின் கோரிக்கைக்கு அமைய இந்த இளைப்பாறும் மண்டபத்தை அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

கூடிய விரைவில் இந்த இளைப்பாறும் மண்டபம் அமைத்து முடிக்கப்பட்டு அரியாலை கிழக்கு கடற்றொழிலாளர் அமைப்பிடம் ஒப்படைக்கப்படும் எனவும் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அரியாலை கிழக்கில் வசிக்கும் மீனவர்களின் தொழில் துறை மேம்பாட்டிற்கு இந்த இளைப்பாறும் மண்டபம் பெரும் உதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சுன்னாகத்தில் திருட்டு

(வலிகாமம்)

பட்டப்பகல் வேளையில் துணிகரமாக வீட்டில் நுழைந்த திருடர்கள் வீட்டின் கதவுகளை கோடாரி கொண்டு வீட்டினுள் புகுந்து பொருட்களைத் திருடிச்சென்ற சம்பவம் சுன்னாகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இருந்து சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான கணினி உட்பட 65 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன திருடப்பட்டுள்ளன.



வேலணை பிரதேச சபையினால் நெல்சிப் (புறநெகும) திட்டத்தில் நிர்மாணம் செய்யப்படவுள்ள சந்தைக் கட்டடத் தொகுதிக்கு மக்களின் பங்களிப்பு தொடர்பான கலந்துரையாடல் புங்குடுதீவு-வேலணை பிரதேச சபை உப அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் நெல்சிப் பிரிவில் Fact அணியில் உள்ள ஞாவேல்ராஜா, வேலணை பிரதேச சபை உறுப்பினர் ப.தயானந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (தெல்லிப்பளை நிருபர்)

தமிழ்நாதம்
Thamil Naatham

ஆகஸ்ட் மாதம் 09ஆம் திகதி வியாழக்கிழமை

## சிறுவர், சிறுமியரின் அவலங்கள், துயரங்கள் பத்திரிகைகளின் வர்த்தகப் பண்டங்களல்ல!

யாழ்.மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழித்தல் சம்பந்தமான கலந்துரையாடலொன்று நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. யாழ்.மாவட்டத்திலிருந்து வெளிவரும் பிரதான பத்திரிகை ஆசிரியர்களுடனான இந்தக் கலந்துரையாடலில் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். யாழ். அரசாங்க அதிபரே இந்தக் கலந்துரையாடலுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார். சிறுவர் துஷ்பிரயோகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குப் பத்திரிகையாளர்கள் வழங்கக்கூடிய பங்களிப்புப் பற்றிக் கலந்துரையாடுவதற்கே இச் சந்திப்பு இடம்பெற்றது.

அழைப்புக் கடிதத்தில் யாழ்.அரசாங்க அதிபர் குறிப்பிட்டது போன்று சிறுவர் துஷ்பிரயோகத்தை முற்றுமுழுதாக இல்லாதொழித்தல் என்பது மிகவும் கஷ்டமான காரியம். ஆனால் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் பாரிய பங்களிப்புச் செய்யமுடியும்.

மக்கள் மத்தியில் கருத்துக்களை உருவாக்குவதில் ஊடகங்கள் வகிக்கும் பங்கு அளப்பரியது. இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் சர்வாதிகாரி ஹிட்லருக்கு அவரது சர்வாதிகார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு “கோயபல்ஸ்” என்ற ஓர் அண்டப் புளுகன் இருந்தான். கொடுங்கோலன் ஹிட்லரை ஒரு சோஷலிசவாதியாக காட்டுவதற்கு அவன் பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டான்.

பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளையும் விடயதானங்களையும் ஏதோ பைபிளில் வரும் வேதவாக்காகப் பாமர மக்கள் நம்புவதுண்டு. உலகெங்குமுள்ள பெரும்பாலான செய்திப் பத்திரிகைகளுக்கு ஏதோ ஒரு வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் இருக்கும். அரசு சார்புப் பத்திரிகைகள் அரசாங்கத்தின் ஊதுகுழல்களாகவே இருப்பது வழக்கம். சோவியத் ரஷ்யாவின் “டாஸ்” என்றாலும் சரி, சீனாவின் “சின்ஹுவா” என்றாலும் சரி, ஈரானின் “இர்னா” என்றாலும் சரி இதுவே உண்மையாகும். இலங்கையிலும் கூட இந்த நிலைமைகள் இருக்கின்றன. அதைப்போன்று பத்திரிகை முதலாளிகளுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் இருப்பது பொதுமையானது. அது ஒன்றும் புதுமையானதல்ல.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆறு தமிழ் தினசரிகள் வெளிவருகின்றன. இதற்குமப்பால் கொழும்பில் வெளியிடப்படும் தினசரிகளும் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றன. இலங்கையின் எந்த மாகாணங்களிலிருந்தும் இவ்வாறு அதிக தமிழ்த் தினசரிகள் வெளிவருவதில்லை. அதுமட்டுமல்ல இலங்கையின் முதலாவது பிராந்தியத் தினசரியொன்றும் யாழ்ப்பாணத்திலிருந்துதான் வெளிவந்தது. கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தின்போது யாழ்ப்பாணத்தில் சில பத்திரிகை நிறுவனங்கள் தாக்குதலுக்குள்ளாகின. கருத்துக்களுக்கும் மறுப்புகளுக்குமிடையிலான மோதலின் விளைவு இது.

பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில் மூன்று அம்சங்கள் மிக முக்கியமானவை. மொழி ஆளுமை, விஷய ஞானம், சமூகப் பிரக்ஞை ஆகியவையே இந்த மூன்றுமாகும். சரியைப் பிழையென்றும், பிழையைச் சரியென்றும் காட்டக்கூடிய வார்த்தை ஜாலங்கள் ஆடிய பல ஊடகவியலாளர்களை நாம் கடந்த காலங்களில் கண்டிருக்கிறோம். அரைநிர்வாணப் படங்களைப் பிரசுரித்து இளசுகளின் மனங்களை திசை திருப்பும் பத்திரிகைகளையும் நாம் பார்த்திருக்கிறோம். சமூகப் பிரக்ஞை இல்லாமல் வெறும் வர்த்தக நோக்கோடு நடத்தப்படும் பத்திரிகைகள் இவை.

சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு பத்திரிகைகள் பங்களிக்க வேண்டுமென்ற பிரதான நோக்கத்திலேயே யாழ்.அரசாங்க அதிபர் இக்கலந்துரையாடலுக்கு பத்திரிகை ஆசிரியர்களை அழைத்திருந்தார். சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டுவதில் பாரிய பங்களிப்பை பத்திரிகைகளால் செய்ய முடியும். சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான செய்திகள் கூட சுயதணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்படும் சிறுவர், சிறுமியரின் பெயர், விபரங்களை வெளியிடக்கூடாதென்பது பத்திரிகையாளர்களுக்கான ஒழுக்கக் கோவையின் ஓர் அம்சம். ஆனால் சில பத்திரிகைகள் இந்த விதியை மீறிச் செயற்பட்டிருக்கின்றன. இதனால் பாதிப்புக்குள்ளாகும் சிறுவர், சிறுமியரும், அவர்கள் சார்ந்த குடும்பங்களும் பாரிய சமூகப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய ஆபத்து உருவாகிறது.

யாழ்ப்பாணத்தில் நிலவிய ஆயுத கலாசாரம் மக்களின் உள்ளங்களையும் பாதித்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாக அடாவடித்தன உந்துதல்களும் நிலவத்தான் செய்கின்றன. யாழ்.அரசாங்க அதிபரின் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்களோடு பத்திரிகை ஆசிரியர்கள் தொடர்ச்சியாக கலந்துரையாடி சிறுசுகள் சந்திக்கும் அக்கிரமங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமென்பது அவரது நல்நோக்கமாகும். அப்பாவிச் சிறுவர், சிறுமியரின் துயரங்களையும், அவலங்களையும் பத்திரிகைகள் வர்த்தகப் பண்டங்களாக்கக் கூடாது.

சிறுவர்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய அக, புறச் சூழ்நிலைகள் குறித்து ஊடகங்கள் எச்சரிக்கை செய்ய வேண்டும். வர்த்தக நோக்கோடு மட்டும் ஊடகங்கள் செயற்படக் கூடாது. கட்டுப்பாடின்றி இணையத்தளங்கள் வெளியிடும் செய்திகளை அப்படியே எடுத்து அச்சு ஊடகங்கள் பயன்படுத்தும்பொழுது மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சமூகப் பிறழ்வுகளை ஏற்படுத்தக்கூடிய செய்திகளை பத்திரிகைகள் பிரசுரிக்காமல் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் சிறுசுகளின் பிரச்சினை குறித்து அனுபவ ரீதியான பல உண்மைகளைக் கண்டறிந்திருப்பார்கள். அவர்களுடன் பரஸ்பரம் கலந்துரையாடி சமூகப் பிரக்ஞையோடு பத்திரிகைகள் பணிபுரிய வேண்டும் என்பது மிகக் கட்டாயமாகும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# 2012 - இல்லாத அறிவியலும் இருக்கும் இறையியலும்

உலகமே அழிந்தொழிய நெருப்பும், நீரும், பிளக்கும் பூமியுமாக, ஒரு குறிப்பிட்ட நாளுக்காகக் காத்திருந்து சதி செய்யும் மகா பிரளயம். ஆனால் இந்த அழிவு முன்னறிவிக்கப்பட்டது. பழைய அழிந்து போன மாயா பண்பாட்டு மரபிலும், பின்னர் அண்மைக் காலங்களில் அறிவியல் மூலமும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் நோவாவின் பேழையை ஒத்த உயர் தொழில்நுட்ப பேழைகளில் காப்பாற்றப்பட்டு புதிய உலகை சிருஷ்டிப்பார்கள்.

“அக்டோபர் 22 1844: அமெரிக்கா பெரும் பரபரப்புடன் காத்திருந்த நாள் அது. அமெரிக்க நகர் ஒன்றின் சிறு மலைக்குன்றொன்றில் ஏறி நின்றிருந்தனர் ஒரு கூட்டத்தினர். இதோ உலகம் அழியப்போகிறது. இதோ தேவதூதர்களின் எக்காளம் ஒலிக்கப்போகிறது. இதோ மீட்பின் வாசல் திறக்கப் போகிறது. சில வருடங்களாகவே அமெரிக்கா எங்கிலும் பரவியிருந்த பேச்சு அது. வில்லியம் மில்லர் என்கிற ஒரு விவசாயி போதகராக மாறி பெரும் புகழ் அடைந்திருந்தார். அவரைப் பின்பற்றுபவர்களுக்கு அவர் ஒரு இறைவார்த்தையாளர் பைபிளின் உலக அழிவு குறித்த முன்னறிவுப்பகளை “தானியேலின் நூல்” என்கிற யூத விவிலியத்திலிருந்து எடுத்து வியாக்கியானம் கொடுத்து கணக்குகள் செய்து இந்த நாளை கண்டடைந்திருந்தார் மில்லர். அன்று முழுவதும் ஏசுவின் இரண்டாம் வருகைக்காக காத்திருந்த அவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்கள். இந்த நாள் மில்லரைப் பின்பற்றுவோரால் ”பெரும் ஏமாற்ற நாள்” என அழைக்கப்படுகிறது. ஆனால் நம்பிக்கையாளர்கள் இதற்கு உடனே ஒரு தீர்வு கண்டனர். பூமி ஒரு புகலிடம்தான்.

தேவன் அந்த நாளில்தான் வானக புகலிடத்தை தயார் செய்தார் என்று அவர்கள் நம்ப ஆரம்பித்தனர். பொதுவாக அட்வெண்டிஸ்டுகளும், குறிப்பாக செவன்த் டே அட்வெண்டிஸ்ட்களும் இந்த மில்லரின் இறையியல் வாரிசுகள்.

பேரழிவுகளின் மீது மேற்கத்திய உலகுக்கு ஒரு மீளாக்காதல் இருக்கிறது. முன்னறிவிக்கப்பட்ட பேரழிவு. உலக சிருஷ்டியின் அனைத்து உயிரினங்களையும் காப்பாற்றி பேழையில் வைத்து அதனைக் காப்பாற்றும் மனிதன் - அவன் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் - இந்த தொன்மங்கள் மேற்கத்திய மனிதன் மீது கொண்டிருக்கும் பிடிப்பு அபாரமானது. இறைவனது சிருஷ்டியில் ஆரம்பித்து இறைவனது சீற்றத்தில் அழியும் ஒற்றைக்கோட்டு எளிய மானுடமையவாத நம்பிக்கை இது. மேற்கின் பார்வையில் மானுடம் என்பது ஐரோப்பா அமெரிக்கா மட்டுமே எனும் சூத்திரம் சொல்லாமல் பெறப்படும். எனவே இந்த நம்பிக்கையை உண்மையாக ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு தலைமுறையிலும் பேரழிவு தனது தலைமுறையில் நடக்கப்போவதாக நம்பும் கூட்டங்கள் இருந்தவாறே உள்ளன.

2012 திரைப்படத்தில் நவீனத்துவ முலாம் பூசி வருகிறது.

திரைக்கதையின் உலகின் இந்த மகா மெகா டிஜிட்டல் அழிவுக்கான வில்லன்கள் நியூட்ரினோக்கள் எனும் அணு உட்துகள்கள். 1930 இல் வூல்ஃப்காங்க் பாலி. இயற்பியலின் சில ஆதார விதிகளின் அடிப்படையில் இத்துகள்களின் இருப்பை ஊகம் செய்தார். என்ரிக்கோ பெர்மி அவற்றுக்கு நியூட்ரினோ என நாமகரணம் செய்தார். அவற்றின் இருப்பை 1950களில் ஊர்ஜிதப்படுத்திய அறிவியலாளருக்கு 1995 இல் நோபல் பரிசு கிடைத்தது. செய்யப் போகும் அமைதி முயற்சிக்காகக் கிடைக்கும் ஒபாமா-எஃபெக்ட், அறிவியலுக்கான நோபல் பரிசுகளில் இன்னமும் நிகழ்வதில்லை என்பது ஒரு விதத்தில் ஆறுதல். நியூட்ரினோக்களுக்கு நிறையும் இல்லை, மின்சார்பும் இல்லை. எனவேதான் அவற்றை கண்டுபிடிப்பதென்பது அத்தனை அரிதான பல பில்லியன் டாலர்களைக் கொட்டி செய்யப்படுகிற விஷயமாக இருக்கிறது.

நிறையற்ற நுண் துகள்கள் விண்வெளியிலிருந்து வந்து புவியின் மையத்தை - அதாவது 350 ஜிகாபாஸ்கல் அழுத்தத்தில் திடமாக இருக்கும் மையத்தை - 2012 இற்கு கணக்கிட்டு உருக்கி உலக அழிவை ஏற்படுத்துவதென்றால் டாம் அண்ட் ஜெர்ரி கார்ட்டூன்களில் வரும் சில காட்சிகளைக் காட்டிலும் நம்ப முடியாத ஒரு அளப்பு அது. சூரியனும் நியூட்ரினோக்களை உமிழும். சூரிய கதிர்வீச்சு ஒரு பதினோரு வருட சுழற்சியை தன் இயக்க ஒழுங்காகக் கொண்டது. 2012-14 வருடங்களில் அத்தகைய ஒரு சாதாரண சராசரி சூரிய கதிர்வீச்சு சுழற்சி அதன் சுழலுச்சம் காணும். அது அதற்கு முன்னும் பின்னுமான ஏனைய பதினோரு ஆண்டு சுழற்சிகளிலிருந்து எவ்விதத்திலும் மாறுபட்டதோ அதீதமான உச்சம் கொண்டு புவியை அழிப்பதோ அல்ல எனலாம்.

அடுத்து மாயன் முன்னறிவிப்பு.

மாயன் பண்பாடு அழிந்து விட்ட பண்பாடு. மேற்கத்திய நியூ ஏஜ்காரர்களிடம் இப்பண்பாட்டின் மாயம் ஒரு பெருங்கவர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக ஜேம்ஸ் ரெட்ஃபீல்ட் எழுதிய ”செலஸ்டைன் ப்ராபெஸி” (Celestine Prophecy) எனும் கற்பனை பாதி, கருத்துகள் மீதி என்கிற ரீதியில் எழுதப்பட்ட நூலில் மாயன்களின் மறைவுக்கு அவர்கள் ஆன்மிக பரிணாம வளர்ச்சியில் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்த போது அதிபரிமாணவெளிகளுக்குள் சஞ்சரித்து மறைந்துவிட்டார்கள் என சொல்லப்படுகிறது. செலஸ்டைன் ப்ராபெஸி மிகப்பெரிய வியாபார வெற்றி. அதற்கு முன்னால் அது நியூ ஏஜ் குழுக்களிடம் கையெழுத்து பிரதியாக வலம் வந்து முதிராமணங்களில் பிரமிப்புகளை ஏற்படுத்தியது. என்ன விஷயமென்றால் மாயன் பண்பாடு ஒரு மர்மமாக மேற்கத்திய - குறிப்பாக அமெரிக்க மனதுக்கு - பெரும் ஈர்ப்பாக இருந்து வருகிறது. 2012 இன் முன்னறிவுப்பு மாயன்களிடமிருந்து வருவதில் ஒரு கூடுதல் கவர்ச்சி இயல்பாகவே எழுகிறது. ஆனால் இந்த 2012 உலக அழிவு குறித்த வதந்திகள், கதைப்பின்னல்கள் இத்திரைப்படத்தைக் காட்டிலும் பழமையானவை. அவற்றின் சரடுகள் (pun intended) படு-சுவாரசியமானவை.

சுமேரிய க்யூனிஃபார்ம் எழுத்துப் பலகைகளிலும் அப்பண்பாட்டின் சித்தரிப்புகளிலும் ஒரு மர்மமான கிரகம் குறித்து சொல்லப்பட்டிருப்பதாகவும் அது 2003 இல் தோன்றி உலகத்தில் பேரழிவை உருவாக்குமெனவும் பரவலாக நம்பப்பட்டது. 2003 புவியில் எவ்வித குறிப்பிடத்தக்க அழிவுமின்றி வானில் எவ்வித புதிய வரவுமின்றி கழியவே இந்த அழிவு முன்னறிவிப்பு மாயன் பண்பாட்டில் மையம் கொள்ள ஆரம்பித்தது. மெஸபடோமிய பண்பாட்டு நீட்சியாக மாயனைக் காண்பதிலும் முன்னறிவிக்கப்பட்ட ஒன்று வானில் மேகங்களூடாக தோன்ற உலகம் அழிவதும் முக்கியமான மனப்படிமம். அதனை ஆபிரகாமியத் தொடர்பற்ற மாயன் பண்பாட்டில் ஒட்டுவது ஒரு ஆபிரகாமிய நம்பிக்கையையே அனைத்து பண்பாடுகளும் முன்னறிவிப்பதான சித்தரிப்பை பரவலாக்குவது.

மாயன்கள் இந்துக்களைப் போலவே காலச்சுழற்சிகளில் நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களின் மகா-கால சுழல் 1872000 நாட்களைக் கொண்டது (அதாவது 5128 ஆண்டுகள்) இச்சுழல் கி.மு 3114 இல் ஆரம்பித்ததாகக் கணக்கிடப்படுகிறது. இது 2012 இல் முடிகிறது.

மறு சுழல் ஆரம்பிக்கிறது. எந்த ஆண்டுச்சுழலையும் போல இது ஒரு பெரும் யுகச்சுழல் அவ்வளவுதான். ஆனால் இதனை உலக அழிவுடன் இணைப்பது அல்லது பேரிடர்களின் முன்னறிவிப்புடன் இணைப்பது மட்டமான இறையியல் முயற்சியில் தொடங்கி மலிவான வணிக தந்திரம் வரை அனைத்தும்.

ஹிந்து புராணங்களிலும் இந்த நோவா-தொன்மத்தின் இணை-புராணங்கள் உண்டு. ஆனால் இந்த உலக அழிவுக்கு குறித்த அச்சம் சமூக வியாதியாக இங்கு உருவெடுக்கவில்லை. இங்கு காலம் ஒற்றை சிருஷ்டியில் தொடங்கி ஒற்றை அழிவில் முடியும் ஒரு கதையாடலாக கற்பிக்கப்படாதது காரணமாக இருக்கலாம். பொதுவாக மேற்கத்திய நாட்டு பண்பாட்டை வாழ்விச்சை கொண்டதென்றும் பாரத மற்றும் ஏனைய கிழக்காசிய நாடுகளின் பண்பாடுகளை வாழ்வு நீக்கத்தன்மை என்று சொல்வோரும் இதை கவனிக்க வேண்டும். ஆயிரமாண்டுகள் தொடுக்கப்பட்ட அன்னிய ஆக்கிரமிப்புகள், அழிவுகள் சூறையாடல்கள், பருவநிலை தடுமாற்றத்தால் ஏற்பட்ட

(7ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனீவா கூட்டத்துக்கான இலங்கையின் அறிக்கையில் பல முக்கிய அம்சங்கள்

இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் காட்டும் அக்கறைக்கு ஈடுசெய்யக் கூடியதாக ஐ.நா.மனித உரிமைப் பேரவைக்கு இலங்கை அனுப்பும் ஆவணத்தில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் கூறினார்.

நான்கு வருடங்களுக்கு ஒரு தடைவ ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் மனித உரிமை சம்பந்தமான பதிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவது வழக்கம். அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் பேரவைக் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

கடந்த மார்ச்சில் ஜெனீவாவில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானமொன்றினை அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றியது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற அழுத்தம் கடந்த பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இந்த விடயத்தில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளோம் என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

# சீனாவிடம் இருந்து பேரூந்துகள் இறக்குமதி செய்ய இலங்கை திட்டம்

இந்தியாவிடம் இருந்து பேரூந்துகளை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக சீனாவிடம் பேரூந்து இறக்குமதி செய்யப்போவதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷடன் கலந்தாலோசிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போது இலங்கையின் பேரூந்து சந்தையில் இந்தியாவின் அசோக் லேலண்ட் நிறுவனமே ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

சீனாவின் மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்தநிலையில், முதல்முறையாக சீனப் பேரூந்துகளை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தற்போது வழங்கப்படும் இந்தியாவின் அசோக் லேலண்ட் நிறுவனம், பேரூந்துகளை கடனுக்கு வழங்குவதில்லை என்றார்.

# ஹிருணிகா பற்றிய செய்திகளை அம்பலப்படுத்துவேன்

## ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரியா

ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் புதல்வியான ஹிருணிகா, நீதிமன்ற வழக்கு விசாரணை தொடர்பாகப் பல பாதிப்பான அறிக்கைகளை ஊடகங்களுக்கு விடுத்து வருகிறார். அவர் இதனை நிறுத்த வேண்டும். இல்லையேல் ஹிருணிகாவுக்கு எதிராக இணையத்தளங்களில் வெளிவந்த செய்திகளை நீதிமன்றத்திலும் ஊடகங்களுக்கும் அம்பலப்படுத்துவேன்" என்று துமிந்த சில்வா எம்.பி. சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய கூறினார். கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் பிரசன்ன டீ சில்வா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜரான சட்டத்தரணி ஹேமந்த வர்ண குலுசூரிய மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கின்போதே அவர் இவ்வாறு கூறினார். நீதிமன்றத்துக்கு வெளியே செய்யப்பட்டதாகக் கூறப்படும் நீதிமன்ற அவமதிப்புக் குறித்து விசாரணை நடத்துவ தற்கான நியாயாதிக்கம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்குக் கிடையாது என்று மாஜிஸ்திரேட் குறிப்பிட்டார்.

ஹிருணிகா பிரேமச்சந்திராவுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மாஜிஸ்திரேட் தள்ளுபடி செய்தார். இந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டமை குறித்துச் சம்பந்தப்பட்ட தரப்பினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யலாமென்றும் மாஜிஸ்திரேட் கூறினார்.

# களுத்துறை பிரதேச சபைத் தலைவர் விளக்கமறியலில்!

களுத்துறை பிரதேச சபைத் தலைவர் விதான பதிரகே அக்ஷ்மன் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் ரஷ்மி சிங்கப்புலி நேற்று உத்தரவிட்டார். முப்பது இலட்ச ரூபா இலஞ்சம் பெற்றாரென்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். பிரதேச சபைத் தலைவரின் உதவியாளர் ஒருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டது.

# மூதூர் 17 பேர் கூட்டுப் படுகொலை குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

## பிரான்ஸ் தூதுவர்

மூதூரில் ஆறு வருடங்களுக்கு முன்னர் கூட்டாகக் கொல்லப்பட்ட பிரான்ஸ் தன்னார்வத் தொண்டர் அமைப்பின் ஊழியர்கள் பதினேழு பேரின் மரணங்கள் தொடர்பாக புதிய விசாரணையொன்று இரகசியப் பொலிசாரால் நடத்தப்படுமென்று இலங்கையின் சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார்.

இதில் பிரெஞ்சு அரசாங்கம் அக்கறை கொண்டிருப்பதாக நான் கூறினேன். புதிய விசாரணைகள் குற்றவாளிகளைக் கூண்டிலேற்றும் என நான் நம்புகிறேன்.

இவ்வாறு இலங்கையிலுள்ள பிரான்ஸ் தூதுவர் திருமதி கிறிஸ்ரின் ரொபிச்செசன் கூறினார்.

இந்தக் கூட்டுப் படுகொலைகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் இதுவரை தண்டிக்கப்படாதது குறித்து எனது அரசாங்கத்தின் கவலையை நான் வெளிப்படுத்தி வந்துள்ளேன்.

# வெளியார் ஜீ.சீ.ஈ. பரீட்சை நிலையங்களுக்குச் செல்லத் தடை

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்கும் பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கும் வெளியார்கள் எவரும் செல்லாதபடி தடை விதிக்கப்பட்டிருப்பதாகப் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என். ஜே.புஷ்பகுமார தெரிவித்தார். பரீட்சார்த்திகளைத் தவிர வேறு எவரும் செல்ல முடியாதபடி இந்தத் தடை கடுமையாக அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் சொன்னார்.

தேவையற்ற சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுப்ப தற்காகவே இந்தக் கடுமையான வீதி பின்பற்றப்படுவதாகவும் அவர் சொன்னார்.

# அமைச்சருக்கு எதிராகக் குற்றப்பத்திரம்?

மன்னார் மாஜிஸ்திரேட்டை அமைச்சர் ரிசாட் பதியூதீன் மிரட்டினாரென்ற குற்றச்சாட்டுத் தொடர்பான இரகசியப் பொலிசாரின் அறிக்கையை முழுமையாக ஆராய்ந்த பின்னர், அமைச்சருக்கு எதிராகக் குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னார் மாஜிஸ்திரேட் ஏ.ஜூட்சனை தொலைபேசியில் மிரட்டினாரென்றும், மன்னார் நீதிமன்றத் தாக்குதல் தொடர்பாக அமைச்சர் ரிசாட் பதியூதீன் மீது நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# தரம்குறைந்த பெற்றோலை வழங்கிய கம்பனி இப்போதும் முக்கிய விநியோகஸ்தர்

தரம் குறைந்த பெற்றோலைக் கடந்த வருடம் ஜூன் மாதம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு வழங்கிய ஐக்கிய அரபு எமிரேட்டிலுள்ள தேசிய எண்ணெய் கம்பனி இப்போதும் பெற்றோலியப் பொருட்களை இலங்கைக்கு வழங்கும் முக்கிய கம்பனியாகத் தொடர்ந்தும் உள்ளது. பெற்றோலிய அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் தரம் குறைந்த பெற்றோலை வழங்கியதற்காக அந்தக் கம்பனியிடமிருந்து நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தையில் இன்னமும் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

# 2012-இல்லாத அறிவியலும் இருக்கும்....

(6ஆம் பக்க தொடர்ச்சி)

உள்ளூர் பஞ்சங்கள், காலனிய ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட கடுமையான பஞ்சங்கள்-அனைத்தையும் இந்த தேசமானது தனது ஆதார வாழ்க்கையில் நம்பிக்கை இழக்காமலே எதிர் கொண்டிருக்கிறது. ஒப்பிட்டு நோக்க ஐரோப்பாவில் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு பிராந்திய இயற்கை சீற்றமும் கொள்ளை நோயும் உடனடியாக ஒரு "இதோ உலகம் அழிகிறது இதோ மீட்பர் வருகிறார்" என்கிற நம்பிக்கை வெறி குழு ஒன்றை உருவாக்கியிருக்கிறது. இத்தனைக்கும் இந்திய சமுதாயம் மிகமோசமான அரசியல் சமுதாய கொந்தளிப்புகளைக் கவனித்துக் கொண்டிருந்த காலகட்டம்தான் அது. எனவேதான் உலகம் நாளைக்கு அழிந்துவிடும் நாளை மறுநாள் அழிந்துவிடும் 2012 இல் அழிந்து விடும் என்று சொல்லுகிற அழிவு நாள் - தீர்க்கதரிசிகள் இந்த மண்ணில் பல்கிப் பெருகி உலகை நிரப்புவார்கள்.

(நன்றி : இணையம்)

# கழுகுக் கண்கள்

சிறு பிள்ளைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் பற்றி இன்று நாடெங்கிலும் நாளாந்தம் வேதனை அளிக்கக்கூடிய செய்திகள் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. இது பற்றி சமீபத்தில் பத்திரிகை ஆசிரியர்களையும், இலத்திரனியல் ஊடகங்களின் செய்திப் பிரிவு பொறுப்பாசிரியர்களையும் சந்தித்த தேசத் தலைவர் எங்கள் நாட்டில் சிறு பிள்ளைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகமாக வீடுகளிலேயே இடம் பெறுகின்றன என்ற அனைவரும் வேதனைப்படக்கூடிய உண்மையான கருத்தை எடுத்துரைத்தார்.

இந்த செய்தியை பத்திரிகையில் வாசித்த நான் உண்மையிலேயே மன வேதனைப்பட்டேன். வீட்டில் உள்ள தாத்தாமார், மாமாமார், அண்ணன்மார், மைத்துனர்கள் போன்றவர்களே இவ்விதம் சிறு பிள்ளைகளை பாலியல் ரீதியில் இம்சித்த சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதற்கு போதியளவு ஆதாரங்கள் இருக்கின்றன என்றும், தங்கள் பிள்ளைகளை முதலில் வீட்டில் உள்ளவர்களிடம் இருந்தும், அயலவர்களிடம் இருந்தும் காப்பாற்றுவது பெற்றோரின் கடமை என்றும் சமூகவியலாளர்கள் கருத்து தெரிவித்திருப்பதையும் நான் கேட்டறிந்தேன்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பாடசாலை வாகனங்களில் அனுப்பிவைக்கும் போது அந்த வாகனங்களில் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய பொறுப்புணர்வுடைய பெண் ஒருவர் இருக்கிறாரா? என்பதை முதலில் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும். அது போன்று சிறு பிள்ளைகளை ஆசிரியர்களிடம் டியூசன் வகுப்புகளுக்கு அனுப்பும் போதும் அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? என்பதை முதலில் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்விதம் பெற்றோர் தங்கள் சிறு பிள்ளைகளை, குறிப்பாக பெண் பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தால் அவர்களுக்கு எத்தகைய பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களும் ஏற்படுவதை தவிர்த்து விடலாம். இவ்விதம் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு பதில் தங்களுக்கு நன்கு தெரிந்தவர்களின் மற்றும் அயலவர்களின் பாதுகாப்பில் விட்டுவிட்டு செல்லும் போதே பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்களை இந்த அப்பாவிச் சிறு பிள்ளைகள் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

விவகாரத்தின் மூலம் அல்லது மனஸ்தாபங்களின் மூலம் பிரிந்து வாழும் பெற்றோரின் பிள்ளைகளே இவ்விதம் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு அதிகமாக இலக்காகிறார்கள். விவாகரத்து செய்த பெண்ணுடன் சேர்ந்து வாழும் ஆண்கள் அப்பெண்ணின் மூத்ததாரத்து பெண் பிள்ளைகளை தனது பிள்ளைகள் போல் அன்போடு பராமரிப்பதற்கு பதில், சந்தர்ப்பம் கிடைக்கும் போது இந்த அப்பாவி பிள்ளைகள் மீதும் தங்கள் காம வெறியை கட்டவிழ்த்து விடுகிறார்கள் என்று சமீபத்தில் சமூகவியலாளர்கள் நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

நாம் இவ்வளவு நேரமும் சிறு பிள்ளைகளை பாதுகாப்பது பெற்றோரின் கடமை என்பதை எடுத்துரைத்தோம். விடலைப் பருவத்தை அடைந்த தங்கள் பெண் பிள்ளைகளை அதே வயதையுடைய ஆண் நண்பர்களிடம் இருந்தும் பாதுகாப்பது பெற்றோரின் கடமையாகும். இதனையே விடலைப் பருவத்தையடைய ஆண், பெண் பிள்ளைகள் துஷ்பிரயோகம் செய்து, தங்கள் கையடக்கத் தொலைபேசிகளில் காண்பிக்கப்படும் துர்நடத்தை படங்களை பார்த்து, உணர்ச்சி பரவசமடைந்து தங்களுடைய பள்ளி தோழன் அல்லது தோழியுடன் சில மணி நேரத்தை திரைப்பட மாளிகையில் அல்லது அமைதியான கடற்கரை புதர்களில் இல்லையேல், ஒரு ஹோட்டல் அறையில் குதூகலமாக கழிக்கலாம் என்ற நம்பிக்கையில் தவறான செயற்பாடுகளில் இறங்குகிறார்கள்.

இதனால் ஏற்படப்போகும் பாரதூரமான விளைவுகளை அவர்கள் அப்போது உணர்ந்து கொள்வதில்லை. பொலிஸாரின் கையில் சிக்கினால் தங்களுக்கும் தங்கள் பாடசாலைக்கும், பெற்றோருக்கும் பேரவமானம் ஏற்படும் என்பதையும் அவர்கள் உணராமல், தங்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் தீய செயற்பாடுகளில் ஈடுபட்டு, வாழ்நாள் பூராவும் வேதனையை அனுபவித்து வருகிறார்கள்.


அவ்விதம் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கவனமாக பராமரித்தால் நிச்சயம் இது போன்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் நாட்டில் இடம்பெறுவதை முற்றாக நிறுத்திவிடலாம் என்ற நம்பிக்கையுடன் நான் எனது கூட்டுக்கு பறந்து சென்றேன்.



# கல்வி முறைமையில் புதிய புரட்சிகள் வேண்டும்

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்க கூடிய இடமாக இருப்பவை பள்ளிகள். வளர்ந்து வரும் நாளைய தேசத்தின் எதிர்காலங்களுக்கு கற்றுக் கொடுக்கப்படும் கல்வி முறை எப்படி இருக்கவேண்டும்? என்ன மாதிரியான முரண்கள் இருக்கின்றன? என்பது பற்றி யாருக்கும் அதீத அக்கறை கொள்வது இல்லை.

உலகின் எல்லா பிரச்சினைகளையும் அலசும் அரசியல்வாதிகளும் பொது நல விரும்பிகளும், பெற்றோர்களும், கல்வி முறையைப் பற்றியும், பள்ளிப் பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் பாடத் திட்டங்கள் பற்றியும் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். எது சரியான கல்வியாயிருக்கலாம் என்று நாம் யோசித்த போது ஜனித்த கட்டுரையை உங்களிடம் சமர்ப்பிக்கிறோம்.



கற்பதன் நோக்கமும், தேவையும் வேறு வகையான ஒரு நோக்கத்தை நோக்கி போவதாகவே எனக்கு படுகிறது. என்னை சுற்றிலும் உள்ள மாணவர்களின் அறிவுத்திறன் வெறும் மனப்பாடம் என்ற வகையாலேயே அமைந்திருப்பதாக தோன்றுகிறது. இரண்டு வயது குழந்தை அ, ஆ எல்லாம் சரியாக சொல்கிறது என்பதற்காக சந்தோசப்படும் பெற்றோர்களுக்கு குழந்தையின் சுட்டித்தனத்தையோ, குழந்தைத்தனத்தையோ ரசிக்கும் மனோபாவங்கள் போய்விட்டதாகவே கருதுகிறேன். ஏனெனில் கல்வி சம்பந்தமான டேலன்ட் மட்டுமே பல பெற்றோர்களுக்கு பிரதானமாக போய்விட்டது.

கல்வி கற்பதன் நோக்கம், அதன் பயன், கற்க வேண்டிய காரணம், கல்லாமல் போவதன் பலன், மற்றும் எது கல்வி என்றதொரு ஆழமான பார்வை நமக்கு தேவைப்படுகிறது. இஸ்லாமியர்கள் எந்த அளவிற்கு கல்வியில் பின்தங்கியிருக்கிறார்கள் என்பதனை புரிந்து கொள்ளும் ஆற்றல் கூட அவர்களுக்கு இல்லை. கல்வியின் உண்மை முகமும், செயலும் எல்லா சமூகத்தாலும் சரியாக, புரிந்து கொள்ள முடியாமல் இருக்கும் இக்காலத்தில் குழப்பத்தில் இஸ்லாமியர்களின் கல்வி குறித்த பார்வை இன்றும் மோசமடைந்திருப்பதில் வியப்பில்லை

கல்வியின் மொத்தத்தையும் அலசமுடியாத சூழ்நிலையில் நமக்கு தோன்றுகின்ற கருத்துக்களை, கல்வியின் பயன்களை அறியும் ஆவல் இருப்பவர்களிடம் கொண்டு சேர்த்தல் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாக கருதுகிறேன்.

குழந்தைகளை இரண்டு வயதிற்கு பிறகு ஏதேனும் பாலர் பள்ளியில் சேர்த்து விடுகிறார்கள். வீட்டில் இருப்போரும் (பெற்றோர்கள்தான்) ஏதோ தங்களால் முடிந்த அளவிற்கு தங்கள் குழந்தைகள் எல்லாவற்றையும் சீக்கிரமே கற்றுதேர்ந்துவிட வேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார்கள். அவ்வாறான அந்த

கற்றுத் தே
முதற்கொ
காலங்களி
சரி வ
திறனோ அ
இருக்காது.
அறிவுரையு
வியத்திற்கு
தவறு எனி
கணிதபா
காண்பது
பரீட்சையில்

“ எ
அறி
பா

செய்

விடை வரு
சொல்லித்
சொன்னால்
குறை இது
தர்க்கரீதிய
இருந்தால்
விடை கா



எல்லா திறமைகளையும் கொண்டு பணம் சம்பாதிப்பதற்கான வழிமுறைகளை கண்டுபிடிக்கத்தான் உபயோகப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

ஏனெனில் பணம் சம்பாதிப்பது ஒன்றுதான் இன்றைய சமுதாயத்தின் முக்கியமான குறிக்கோளாகவும், முதன்மை திறமையாகவும் கருதப்படுகிறது. (பணம் என்ற ஒன்று எல்லா சமூகத்தாலும் எந்த அளவிற்கு மற்ற எல்லாத் தகுதிகளையும் விட முக்கியத் தகுதியாக ஒருவனிடம் எதிர்பார்க்கிறது என்பதை பற்றி தனி கட்டுரையே வரையலாம். வகுப்புகள் மாறுகின்றன, பதினைந்து இருபது வருடங்கள் கழித்து நல்ல மதிப்பெண்களுடன், பட்டத்துடன் வெளிவரும் ஒரு மனிதன் நல்லதொரு வேலையை தேடிக்கொண்டு, கல்யாணம் செய்து கொண்டு, குழந்தை பெற்றுக் கொண்டு, மீண்டும் தன் குழந்தையை பாலர் பள்ளியில் சேர்த்து, என மீண்டும் ஒரு வாழ்க்கை சக்கரம் ஆரம்பிக்கிறது. கல்வி என்ற ஒன்று பணம் சம்பாதிப்பதற்கு மட்டுமே என்று மனிதனை சுற்றமும் சூழலும் சேர்ந்து நேரிடையாகவோ, மறைமுகமாகவோ கட்டாயப்படுத்துகிறது


பத்தாம் வகுப்பில் 80 சதவீதம், 12ம் வகுப்பில் 90 சதவீதம், பட்டப்படிப்பில் 80 சதவீதம் என்று ஒருவன் எடுத்தால் அவனை ...ர்ந்தான் என்று கற்றறிந்தவர்கள் ...ண்டு கருதுகிறார்கள். வாழ்கின்ற இடைப்பட்ட ...ல் பருவத்திற்கேற்ற வாழ்க்கை முறையில் ...ாழ்வதெ...து எது என்ற சிந்தனையோ, ...அவன் கற்ற பள்ளிக்கூட கல்வியில் ... அனுபவம் மற்றும் மற்றவர்களின் ...ும் சார்ந்த வாழ்வியல் பாடங்கள்தான் இந்த் ...த உதவும். மேலே கூறிய வழிமுறைகள் ...ில், எது சரி?

...டத்தில் 5ம், 5ம் பெருக்கல் செய்து விடை ...எப்படி என்று சொல்லித்தரப்படும். ஆனால் ...ல் 4கையும், 4கையும் பெருக்கினால் என்ன

...து உண்மையான கல்விமுறை என்பதை கற்றறிந்த ...ஞர்களும், மாணவர்களின் கண்ணோட்டத்திலிருந்து ...ார்த்து எடுக்கப்படும் ஆலோசனைகளும், இன்னும் இன்ன பிற யோசனைகளும் கலந்தே ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும். வெறுமனே மனப்பாடம் ...ததை விடைத்தாள்களில் வாந்தி எடுப்பதை கொஞ்சம் யோசிக்க வேண்டும்"

...மென்று கேட்கும்பொழுது, இது எனக்கு ... தரப்படவில்லை என்று ஒரு மாணவன் ... நீங்கள் என்ன நினைப்பீர்கள்? யாருடைய ...? மாணவனா? ஆசிரியரா? கல்விமுறையா? ...ாக (logic) யோசிக்கும் மனோபாவம் ... மட்டுமே சிலவற்றை படித்து பலவற்றுக்கு ...ணும் திறன் நமக்கு கிடைக்கும்.





3ம் வகுப்பிலேயே எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கமுடியுமா என்று நினைப்பவர்களுக்கு ஒரு செய்தி, பத்தாம் வகுப்பு வரையிலும் கூட மேலோட்ட மான வரலாற்று பாடங்கள் தான் வருகின்றது. அப்படி

யென்றால் வரலாற்று பாடத்தின் தேவை இன்றைய உலகிற்கு தேவையில்லையா என்பதல்ல நமது வாதம். அறிவியலாகாட்டும், கணிதமாகட்டும் எல்லாவற்றிலும் இதே மாதிரியான பிரச்சனையே இருக்கிறது. வரலாற்று மாணவன் என்ற வகையில் அதிலிருந்து உதாரணம் காட்டினேன்.

எஎது சரியான கல்விமுறை என்று தீர்வு சொல்வதற் காகவோ இதுதான் சரி என்று வாதிடுவதற்காகவோ எழுதப்பட்ட கட்டுரையல்ல இது. பலதரப்பட்ட கண் ணோட்டங்களின் தொகுப்பிலிருந்து உருவாக்கப்படும் ஒரு சட்டம் அல்லது விதி (RULE) பொதுவில் அதிக நன்மை பயக்கும் என்ற நோக்கிலேயே இதை பார்க்க வேண்டும்.

அது போன்ற கண்ணோட்டங்களில் ஒரு வகையே இது என இக்கட்டுரை பார்க்கப்பட வேண்டும்.மனப்பாடம் செய்த மாணவர்களே ஆரம்ப கல்வியில் (தோராயமாக 12ம் வகுப்பு வரை) அதிக மதிப்பெண் எடுப்பவர்களாக வும், ஏன் புத்திசாலிகளாககவும் கூட இச்சமூக அமைப் பால் கருதப்படுகிறார்கள். அவ்வாறாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் மாநில அளவில் முதலிடங்களில் தேறிய பல மாணவர்கள் Entrance exam எனப்படும் நுழைவுத் தேர்வில் அதே திறமையை காட்டமுடியவில்லை., காரணம், நுழைவுத் தேர்வில் பாடத்தில் உள்ளது போல் அப்படியே கேட்கமாட்டார்கள்.

அது மட்டுமல்ல, மேற்கூறிய தேர்வுகளில் பெண்கள் அதிக மதிப்பெண்களும், தேர்ச்சி விக- ிதாசாரங்களும் பெற்றிருப்பார்கள். ஆனால் நுழைவுத் தேர்வு என்று வரும்பொழுது பெண்களின் மனப்பாட திறமை அங்கு அதே அளவு எடுப்படாமல்

போவதை நாம் அறிவோம்

தண்ணீரின் அறிவியல் குறியீடு (H2O) என்று சொல்லி கொடுத்திருப்பார்கள். ஆனால் நீராவியின் அறிவியல் குறியீடு என்னவென்று கேட்கப்படும் பொழுது, மாணவர்கள் கேள்வி கேட்ட ஆசிரியரை கோபித்து கொள்ள கூடும். காரணம், தண்ணீருக்கு சொல்லிக் கொடுத்தார்களே அன்றி நீராவிக்கு என்ன குறியீடு வரும் என்பதை சொல்லித் தரவில்லையென் பார்கள். ஏனெனில் ஏற்கனவே சொன்னதுபோல் தர்க்கரீ தியாக (logical) சிந்திக்கும் திறமை நமது கல்வி முறையில் இல்லை என்பதே நமது வருத்தம். (நீராவி தண்ணீரிலிருந்து ஆவியாவது என்பதனால் அதற்கும் H2O தான்).

கடந்த பத்து பதினைந்து வருடங்களில் கல்வியில் ஊடீளுநு, மெட்ரிகுலேஷன், மற்றும் ஸ்டேட் போர்டு கல்விமுறை என்று பல வகை அடிப்படை கல்வி முறைகள் நன்கு மக்களிடையே நன்கு பரிச்சியமாயிற்று. நமது பிள்ளைகளை அவரவர் பண வசதிக்கேற்ப (கவனிக்கவும், இங்கும் பணம்தான் ஒரு மாணவனின் கல்விமுறையை தேர்ந்தெடுக்க வைக்கிறது) ஏதேனும் ஒரு கல்விமுறையில் ஆரம்ப கல்வியை படித்துமுடித்து, கல்லூரியில் நுழைகின்ற இருவர் ஒருவருக்கொருவர் தாங்கள் கற்ற ஆரம்ப கல்வி முறையால், அடிப்படை அறிவுத்திறனில் வித்தியாசப்படுகிறார்கள். எல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான திறமை இருக்க முடியாததுதான்,

குறைந்த கட்டணத்தில் கற்றுத்தரப்படும் பள்ளிக்கூடங் களும், அந்த பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் கல்வி முறையும் ஒரு அறிவுத்திறன் குறைந்த மாணவனையே உருவாக்க முடியும் என்ற நிலை யாரால், எதனால், எப்படி வந்தது என்ற சிந்தனையும் அதற்குரிய தீர்வும் தான் சிறந்த கல்விமுறையை உருவாக்கி தர முடியும். வகுப்பறைகளின் தரமும், உடைகளின் தரமும் ஆசிரியர் களின் சம்பள விகிதாசாரங்களும், இன்னும் மற்ற தர உயர்வுகளும், ஒரு பள்ளிக் கூடத்தையோ, கல்வி முறையோ உயர்த்தி காட்டி விட்டு போகட்டும். கற்றுத் தரப்படும் கல்வியின் தரமும், மாணவர்களின் அடிப்படை அறிவுத்திறனும் அந்த உயர்வு தாழ்வில் மாட்டிக்கொள்ள வேண்டாமே, என்பதுதான் நமது விருப்பம்.

எது உண்மையான கல்விமுறை என்பதை கற்றறிந்த அறிஞர்களும், மாணவர்களின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்து எடுக்கப்படும் ஆலோசனைகளும், இன்னும் இன்ன பிற யோசனைகளும் கலந்தே ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும். வெறுமனே மனப்பாடச் செய்ததை விடைதாள்களில் வாந்தி எடுப்பதை கொஞ்சம் யோசிக்க வேண்டும்" வகுப்புகளில் சொல்லித்தரப்படும் பாடங்கள் வெறுமனே மதிப்பெண்கள் எடுப்பதே பிரதான நோக்கம் என்றில்லாமல் ஆரம்ப கல்வியின் பாதியிலோ, மேல்நிலை வகுப்புகளிலிருந்து பாதியிலோ கல்வி கற்க முடியாமல் சென்றவர்களுக்கு கூட அவர்கள் அதுவரையிலும் கற்ற கல்வி அவர்களது வாழ்க்கைக்கும் பாடமாக இருக்கட்டும்.

பல நல்ல "மனிதர்களை" உருவாக்கும், கல்வி திட்ட மாக இனிவரும் காலங்களில் நமது கல்விமுறை இருக் கட்டும். மாற்றம் என்ற ஒன்றை தவிர மற்ற எல்லாமும் மாற்றங்களுக்கு உட்பட்டே தீரவேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை ■

# உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கு யுவ்ராஜ்சிங் தயாராகிறார்- ராஜிவ் சுக்லா




இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவ்ராஜ் சிங்கின் உடல் ரீதியான முன்னேற்றம் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

அத்தோடு இலங்கையில் இடம் பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவெண்ரி-20 தொடரில் யுவ்ராஜ் சிங் இணைக்கக் கூடியதாக அமையும் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

யுவ்ராஜ் சிங்கின் முன்னேற்றம் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையான தாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் சிரேஷ்ட அதிகாரியும் ஐ.பி.எல் அமைப்பின் தலைவருமான ராஜிவ் சுக்லா, யுவ்ராஜ் சிங் கடுமையாகப் பயிற்சி செய்துவருவதாக தெரிவித்தார்.

தேசிய கிரிக்கெட் அக்கடமியில் யுவ்ராஜ் சிங் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்த அவர் உடற்தகுதி நிபுணர்களும் பயிற்சியாளர்களும் அவரை நெருக்கமாகக் கண்காணித்து வருவதாகத் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண ருவெண்ரி-20 தொடரில் யுவ்ராஜ் சிங் தயாராகக் காணப்படுவார் என நம்பிக்கை கொள்வதாகத் தெரிவித்த ராஜிவ் சுக்லா எனினும் ஒரு வீரரைத் தெரிவு செய்வதா? இல்லையா? என்பதைத் தேர்வாளர்களே தீர்மானிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட யுவராஜ் சிங் ஐக்கிய அமெரிக்காவில் சிகிச்சைகளை மேற்கொண்ட பின்னர் கடந்த ஏப்ரலில் இந்தியா திரும்பியதற்கு பின்பு கடந்த ஒரு மாதகாலமாக கிரிக்கெட் பயிற்சிகளை மீள ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் தரவரிசை: சங்கக்கார முதலிடம்

சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் இலங்கையின் சங்ககாரா முதலிடத்திலும், இந்தியாவின் சச்சின், ஷகீர்கான் ஆகியோர் தொடர்ந்து 12ஆவது இடத்தில் உள்ளனர்.

துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய வீரர்களில் சச்சின் மட்டுமே முதல் இருபது இடங்களுக்குள் உள்ளார். இலங்கையின் சங்ககாரா முதலிடத்திலும், தென்னாபிரிக்காவின் கலிஸ், ஆம்லா ஆகியோர் முறையே 2 மற்றும் 3-வது இடங்களிலும் உள்ளனர்.

தென்னாபிபிரிக்காவுக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் சதமடித்த இங்கிலாந்தின் கெவின் பீற்றர்சன் 7 இடங்கள் முன்னேறி 10-வது இடத்தைப் பிடித்துள்ளார்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இந்திய வீரர்களில் ஜாகீர் கான் 12-வது இடத்திலும், பிரக்யான் ஓஜா 20-வது இடத்திலும் உள்ளனர்.

வேறு யாரும் முதல் இருபது இடங்களுக்குள் இல்லை. தென்னாபிரிக்காவின் ஸ்ரெயின் முதலிடத்திலும், பாகிஸ்தானின் சயீத் அஜ்மல் 2-வது இடத்திலும், தென்னாபிரிக்காவின் வெர்னான் பிலாண்டர் 3-வது இடத்திலும் உள்ளனர். பிலாண்டருக்கு இதுதான் அதிகபட்ச தரவரிசையாகும்.

# இலங்கைக்கு மீண்டும் தோல்வி



ருவென்ரி-20 போட்டியில் விராத் கோஹ்லியின் அதிரடி கைகொடுக்க, இந்திய அணி, 39 ஓடடங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற இலங்கை அணி மீண்டும் வீழ்ந்தது.

இந்தியா, இலங்கை அணிகள் மோதிய ஒரே ஒரு ருவென்ரி-20 போட்டி, பல்லேகலவில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் ஜெயவர்த்தனா, களத்தடுப்பை தெரிவு செய்தார். இந்திய அணியில் சேவாக், ஷகிர் கான் நாடு திரும்பியதால், ரகானே, உமேஷ் யாதவ் இடம்பெற்றனர்.

இந்திய அணிக்கு கம்பிர், ரகானே ஜோடி துவக்கம் கொடுதத்து. ஒரு ஓட்டத்துடன் "அவுட்" ஆகும் வாய்ப்பில் இருந்து தப்பிய கம்பிரை (6), 'மிந்தா எரங்க நீடிக்க விடவில்லை. பின், ரகானேயுடன் விராட் கோஹ்லி இணைந்தார்.

ஒருநாள் தொடர் நாயகன் விருது வென்ற கோஹ்லி, வந்த வேகத்தில் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மத்தியூஸ் ஓவரில் அடுத்தடுத்து இரு பௌண்டறிகள் அடித்த இவர், எரங்காவின் ஓவரில் மூன்று பௌண்டறிகள் விளாசினார்.

அடுத்து வந்த பெரேராவின் ஓவரில் "ஹட்ரிக் பௌண்டறி அடித்து மிரட்டிய கோஹ்லி, ருவென்ரி -20 அரங்கில் தனது முதல் அரைசதம் கடந்தார். மறு முனையில், பந்துகளை வீணடித்த ரகானே, பெரேராவின் பந்தில் ஒரு சிக்சர் மட்டும் அடித்து, 21 ஓட்டங்களுடன் (25 பந்து) திரும்பினார்.

மெண்டிஸ் பந்தில் சிக்சர் அடித்து, தனது அசத்தலை தொடர்ந்தார் கோஹ்லி. ரெய்னா தன்பங்கிற்கு பெரேரா, எரங்க பந்துகளை பௌண்டறிக்கு அனுப்பினார். விராட் கோஹ்லி 48 பந்துகளில் 68 ஓட்டங்களுடன் (11 பௌண்டறிகள், ஒரு சிக்சர்) எடுத்து திரும்பினார்.

15 ஓவரில் 2 விக்கெட்டுக்களுக்கு 120 ஓட்டங்களை எடுத்த இந்திய அணி, கடைசி நேரத்தில் தடுமாறியது. இதனால், 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 155 ஓட்டங்களை மட்டும் எடுத்து, இலங்கைக்கு எதிராக, ருவென்ரி-20 அரங்கில் குறைந்தபட்ச ஓட்டங்களைப் பதிவு செய்தது. டோனி (16), ரெய்னா (34) ஆட்டமிழக்கால் இருந்தனர்.

எட்டிவிடும் இலக்கை துரத்திய இலங்கை அணிக்கு, இர்பான் பதான் பெரும் தொல்லை கொடுத்தார். முதல் ஓவரில் டில்ஷானை, "டக் அவுட்"டாக்கினார். இரண்டாவது ஓவரில் தரங்கவை (5) வெளியேற்றிய இர்பான், மூன்றாவது ஓவரில் ஜெயவர்தனாவையும் (26) பெவிலியனுக்கு அனுப்பினார்.


தனது முதல் ஓவரை வீசிய அஷ்வின், முதல் பந்தில் திரிமன் னேவை (20) போல்டாக்கினார். சற்று தாக்குப்பிடித்த மத்தியூஸ், 31 ஓட்டங்களை எடுத்தார். மெண்டிஸ் (11), பெரேரா (1) நிலைக் கவில்லை.

இலங்கை அணியின் வெற்றிக்கு 18 பந்தில், 40 ஓட்டங்கள் தேவைப்பட்டது. போட்டியின் 18 வது ஓவரை வீசிய டிண்டா, இரண்டாவது பந்தில் சந்திமாலை (7) வெளியேற்றினார். நான்காவது பந்தில் எரங்கவை (6), அவுட்டாக்கிய இவர், கடைசி பந்தில் மலிங்காவை, "டக் அவுட்" செய்தார்.

முடிவில், இலங்கை அணி 18 ஓவரில், 116 ஓட்டங்களுக்கு சுருண்டு, 39 ஓட்டங்கள் வித்தியா சத்தில் தோல்வியடைந்தது. இந்தியா சார்பில் டிண்டா 4 விக்கெடடுக்களையும், இர்பான் 3 விக்கெடடுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து, ருவென்ரி-20 தரவரிசையில் இந்திய அணி 4வது இடத்துக்கு (110 புள்ளி) முன்னேறியது. முதல் மூன்று இடத்தில் இங்கிலாந்து (130), தென்னாபிரிக்கா (122), இலங்கை (110) அணிகள் உள்ளன.

# அடுத்த போட்டி இறுதியாக அமையாது



இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள 3ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இங்கிலாந்து சார்பாகத் தான் பங்குபற்றும் இறுதிப்போட்டியாக அமையாது என்பதற்கான உறுதியைத் தனனால் வழங்க முடியாது என இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இங்கிலாந்து அணியின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி-20 அணியிலிருந்து ஓய்வுபெற்ற கெவின் பீறர்சன் இலங்கையில் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம் பெற விருப்பம் தெரிவித்திருந்தார்.

அவர் ஆரம்பத்தில் ருவென்ரி-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற விரும்பியிருக்காத போதிலும், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் விதிப்படி அவரால் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து மாத்திரம் ஓய்வினை அறிவிக்க முடிந்திருக்கவில்லை.

உலக ருவென்ரி-20 அணியில் இடம்பெறவிரும்பும் கெவின் பீற்றர்சனின் விருப்பமும், ஐ.பி.எல் போட்டிகளில் முழுமையாகப் பங்குபற்றும் அவரது விருப்பமும், குடும்பத்தினரோடு அதிக நேரத்தைச் செலவிட விரும்பும் விருப்பமும் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையிலேயே கெவின் பீற்றர்சன் அடுத்த போட்டி தனது இறுதிப் போட்டியாக அமையாது என உறுதிமொழி வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்து சார்பாக டெஸ்ற் போட்டிகளில் விளையாடத் தான் விரும்புவதாகவும், எனவே அடுத்த போட்டி தனது இறுதிப் போட்டியாக அமைந்தால் அது மிகப் பெரிய ஏமாற்றமாக அமையும் எனவும் கெவின் பீற்றர்சன் தெரிவித்தார்.

மேலே குறிப்பிட்ட காரணங்கள் தவிர, இன்னும் பல காரணங்கள் காணப்படுவதாகத் தெரிவித்த கெவின் பீற்றர்சன், காணப்படும் தடங்கல்கள் நீக்கப்பட வேண்டும் என விரும்புவதாகத் தெரிவிததார்.

# இங்கிலாந்து - தென்னாபிரிக்கா டெஸ்ற் சமன்

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

போட்டியின் 5ஆவது நாளான நேற்று முடிவொன்று பெறப்படும் வாய்ப்பு உருவாகிய போதிலும், இறுதியில் சமநிலை முடிவே பெறப்பட்டது.

விக்கெட் இழப்பின்றி 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாளை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்று தனது இனிங்ஸை இடைநிறுத்தியது.

ஒரு கட்டத்தில் 2 விக்கெட் இழப்பிற்கு 182 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னாபிரிக்கஅணி, பின்னர் விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்திருந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஸ் ருடோல்ப் 69 ஓட்டங்களையும், கிரேம் ஸ்மித் 52 ஓட்டங்களையும், ஏ.பி.டி.வில்லியர்ஸ் 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 5 விக்கெட்டுக் களையும், கெவின் பீற்றர்சன் 3 விக்கெட்டுக் களையும், ஜேம்ஸ் அன்டர்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற் றினர்.

253 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி வேக மாகத் துடுப்பெடுத்தாட முயன்ற போதிலும், விக்கெட்டுக்கள் தொடர்ந்து இழக்கப்பட அந்த எண்ணத்தைக் கைவிட்டது. இறுதியில் அவ்வணி 4 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது போட்டியைச் சமநிலையில் முடித்துக் கொள்ள இரு அணியினரும் சம்மதித்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்ரெயர் குக் 46 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 30 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் பெற்றனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக வேர்ணன் பிலாந்தர், டேல் ஸ்ரெய்ன், ஜே.பி.டுமினி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 419 ஓட்டங்களையும், இங்கிலாந்து அணி 425 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டிருந்தன. போட்டியின் நாயகனாக அதிரடிச் சதம் மற்றும் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய கெவின் பீற்றர்சன் தெரிவானார்.

# சிக்கலில் இங்கிலாந்து


இங்கிலாந்து-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி வரும் 16 ஆம் திகதி தொடங்குகிறது. இதில் வெற்றி பெற்றாலோ அல்லது போட்டியை சமன் செய்தாலோ தென் ஆப்பிரிக்கா முதலிடத்தைப் பிடித்து விடும். இந்தப் போட்டியில் வென்றாலே தவிர இங்கிலாந்து முதலிடத்தைத் தக்கவைக்க முடியாது.

# வடமாகாண தடகளப் போட்டியில் உயரம் பாய்தலில் உடுவில் சம்பியன்

(வலிகாமம்)

வடமாகாண கல்வித்தினைக் களத்தினால் நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டிகளில் உடுவில் மகளிர் கல்லூரி வீரர்கனை நவரத்தினசாமி சவராகின 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 1.43 மீற்றர் உயரத்தைப்பாய்ந்து இந்தச் சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



# வானலை நாதம்

# யாழ் மாணவர்களின் வானொலி நாடகங்கள்

இறுதிநாளன்று இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றிய சகல மாணவர்களும் கலந்து கொண்டனர். குறுகிய அழைப்பினை ஏற்று பாடசாலை அதிபர்களும் சமுகமளித்திருந்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன், "கடந்த மாணவர்களின் நடத்தையில், சிந்தனைப்போக்கில் இந்தப் பயிற்சிப்பட்டறை பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. பிறழ்வு உள்ள மாணவர்கள் கூட சீரான முறையில் தமது



நட்பினை தொடர்வதை அவதானிக்க முடிந்தது. மாணவர்களுக்கு இத்தகைய நாடக அமர்வுகள் வாழ்வின் முக்கியமான பகுதிகளை கற்க உதவும். இந்தப் பயிற்சிநெறியில் கலந்து கொண்ட சகல மாணவர்களும் எதோ ஒரு வகையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். ஒவ்வொருவருக்குள்ளும் தன்னையறியாத காயங்கள் ஆழ்மனதில் புதைந்து கிடக்கின்றன. அவற்றை வெளிக்கொணர்ந்து நேர்த்தியான நடத்தையை அமைக்க இத்தகைய பயிற்சிகள் பயனளிக்கும்" என்று கூறினார்.

யாழ். மத்திய கல்லூரி பிரதி அதிபர் ஜெயசீலன் பேசும்போது, "இந்தப் பயிற்சிநெறி மாணவர்களுக்குள் வெளிவராமல் இருக்கின்ற அழகிய குணவியல்புகளை வெளிக்கொணரும். பல்லின சமூகமொன்றில் கொண்டும் கொடுத்தும் வாழும் பக்குவத்தைக் கொடுக்கும் உலகமயமாதல் சூழலில் முரண்பாடுகள் பிரவாகமெடுத்து மாணவர்களை எதிர்நோக்கி வருகின்றன. வித்தியாசங்கள் தினம் தினம் பெருகிக்கொண்டிருக்கின்றன. இனி எதுவும் தூய்மையான அடையாளமாக இருக்க முடியாது. இதன் பின்னர் சிறந்த மாணவர்கள் எனப்படுபவர்கள் வெறும் புத்தகக் கல்வியில் சிறந்து விளங்குபவர்கள் அல்லர். மாறாக, பல்வகைமையை புரிந்துகொண்டு அவற்றிற்கு ஏற்புடைமை வழங்கி, அவற்றில் ஈடுபட்டு வாழும் மாணவர்கள்தான் சிறந்த மாணவர்கள். இத்தகைய மாணவர்களைத்தான் நாம் உருவாக்க முயற்சிக்கின்றோம். இப்பயிற்சிநெறி அதற்கு சிறந்த பலமாக இருக்கும்" என்று



தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பேசிய இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றப் பணிப்பாளர் எம்.சீ. ரஸ்மின் பிரபல எழுத்தாளர்களுடன் பல வானொலி நாடகச் செயற்றிட்டங்களில் வேலை செய்திருக்கின்றேன். ஒலிபரப்புத் துறையில் பல வருடங்கள் கடமையாற்றிய ஒலிபரப்பாளர்களுடன் நாடகத் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கின்றேன். இந்த மாணவர்களின் ஆற்றலை, ஈடுபாட்டை, அர்ப்பணிப்பைப் போல் இதுவரை கண்டதில்லை. பன்மைத்துவ விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்பும் வீரியமும், சக்தியும் இம் மாணவர்களின் பிரதிகளில் அதிகரித்திருந்தது. அதற்கான நாட்டமும், ஈடுபாடும் அவர்களின் ஆர்வத்தில் தெரிந்தது" என்று குறிப்பிட்டார்.

நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டு யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட இந்த நாடகப் பயிற்சிப் பட்டறை பெரிதும் பயனுள்ள வகையிலும், வெற்றிகரமாகவும் அமைந்திருந்தது என்பதுடன், மாணவர்கள் பயிற்சிப் பட்டறையில் பங்கு கொண்டும், நாடகப் பிரதிகளை எழுதியும், நடித்தும் தங்கள் ஆற்றலையும் திறமையையும் வெளிப்படுத்தியி ருக்கிறார்கள் என்பதையும் சிறப்பாகச் சொல்ல வேண்டும்.

> இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் யாழ்ப்பாணத்தில் நடத்திய மாணவர்களுக்கான வானொலி நாடகப் பயிற்சிப் பட்டறையைத் தொடர்ந்து, பயிற்சி பெற்ற மாணவர்களால் எழுதி நடிக்கப்பட்ட பத்து நாடகங்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ் சேவையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. இது தொடர்பாக இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றப் பணிப்பாளர் எம்.சீ. ரஸ்மின் எழுதிவந்த கட்டுரைத் தொடரின் இறுதிப் பகுதி இது.

---

## வானொலி விளம்பரங்களின்
# தனித்துவம்

> இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எட்டுவருட காலம் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக கடமையாற்றிய பின் சொந்தமாக ஒரு விளம்பர நிறுவனத்தை நடத்தியவர் காவலூர் இராசதுரை. இதனால் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு " விளம்பரத்துறை - தோற்றம், வளர்ச்சி, வீச்சு, ஆதிக்கம் " என்ற நூலை எழுதி வெளியிட்டவர். இந்த நூலில் வானொலி விளம்பரத்தின் தனித்துவத்தைப் பற்றி அவர் எழுதியுள்ள கட்டுரையின் முதற்பகுதி கடந்த வாரம் வெளியாகியது. இரண்டாவது பகுதி இவ்வாரம் வெளியாகிறது.

வானொலி விளம்பரம் எழுதுவோர் பின்வரும் அம்சங்களை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

**எளிமை:** வழக்கிலுள்ள சொற்கள், சுருக்கமான சொற்றொடர்கள், எளிய வசன அமைப்பு, பிரதான பயனை வலியுறுத்தும் வகையில் எழுத வேண்டும். பல சிறப்புகளைச் சொல்லிக் கேட்போர் மனதில் குழப்பம் ஏற்படுத்தலாகாது.

**தெளிவு:** சிந்தனை ஒரே தடத்தில் ஓட வேண்டும். தேவையற்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளுவதுடன் எளிமையான வசனங்களை நேரடியாகப் பேசுவது போலவும் எழுத வேண்டும். வர்ணனைகள், வெற்றுச் சொற்கள், தெளிவற்ற சொற்றொடர்களை விலக்குவதும், தேவையற்ற சொற்களை நீக்கி விடுவதும் வாசகம் தெளிவாகவும் இறுக்கமாகவும் அமையும் வரை திருத்தித் திருத்தி எழுதுவதும் முக்கியமானது.

**இசைவு:** எழுதப்படும் விளம்பரச் செய்தி ஆரம்பம் முதல் முடிவு வரை தர்க்க ரீதியாக, கேட்பதற்கு இலகுவாக, ஆற்றொழுக்குப் போல மெல்லென மனதிற் படிய வேண்டும்.

**ஆன்மநேயம்:** நேரடியாக, ஒருவர் அல்லது இருவரோடு உரையாடுவது போல இயல்பான இனிய தொனியில் விளம்பர வாசகம் அமைதல் வேண்டும். நீங்கள் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துவது முக்கியமானது.

**இனிமை:** சலிப்பூட்டும் அல்லது இதமற்ற சொற்களைக் கையாளுவதை தவிர்த்து ஒரு பொருள் அல்லது சேவை பற்றி நண்பர்கள் பேசிக் கொள்வது போல வசனங்களை அமைத்தல் வேண்டும்.

**நம்பகத்தன்மை:** ஒவ்வொரு பொருளிலும் நல்ல அம்சங்கள் உண்டு. அவற்றைப் பற்றிய உண்மையைச் சொல்ல வேண்டும். எதையும் மிகைப்படுத்தக்கூடாது.

**ஆர்வம்:** சுவையற்ற விளம்பரம் கேட்போரை அலுப்படையச் செய்யும். வாடிக்கையாளர் விளம்பரத்தைக் கேட்பதற்கு கைமாறாக அவருக்குச் சுவையான தகவல் எதையேனும் வழங்க வேண்டும்.

**தனித்துவம்:** விளம்பரம் தனிச் சிறப்புடையதாக அமைய வேண்டுமானால் ஒரு புதிய அணுகுமுறையை, ஒரு விசேட ஒலிக்குறியை அல்லது தனித்துவமான குரல் வளத்தை புகுத்துதல் அவசியம். பத்திரிகை விளம்பரங்கள் இடப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றன. வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்கள் நேரத்தை ஆதாரமாகக் கொண்டு கணிக்கப்படுகின்றன. வானொலி விளம்பரங்கள் பொதுவாக பின்வரும் கால வரையறைக்கு ஏற்ப அமைக்கப்படுகின்றன.

**10 விநாடி - 20 சொல்**
**15 விநாடி - 25 சொல்**
**30 விநாடி - 50 சொல்**
**60 விநாடி - 100 சொல்**

இங்கு நேர அளவே முக்கியம். சொற்கள் அன்று. பதினைந்து விநாடிகளுக்குள் 30 வார்த்தைகளைச் சொல்ல முடியுமானால் எவரும் தடுக்கார். ஆனால் கேட்போர் அவற்றைத் தெளிவாகக் கிரகிக்கக்கூடியதாக அவை சொல்லப்படல் அவசியம். வானொலி விளம்பரங்கள் பல்வேறு வகைப்படும்.

**அவற்றில் சில வருமாறு:**

நேரடி அறிவித்தல்: மிகவும் சாதாரணமான உத்தி இது. வானொலி நிலையத்தில் பணியாற்றும் அறிவிப்பாளர் முழு விளம்பரத்தையும் தாமே தனியாக வாசித்து விடுவார். விளம்பரத்தின் வெற்றி தோல்வி அதை வாசிப்பவரின் திறமையைப் பொறுத்ததாக அமையும்.

இரண்டு அறிவிப்பாளர்: விளம்பர வாசகத்தை இருவர் மாறி மாறி வாசிப்பார்கள். இந்த உத்தி விளம்பரத்துக்கு ஒரு துரித கதியை வழங்குவதுடன் ஓரளவு பரபரப்பையும் ஏற்படுத்தும்.

**வாழ்க்கைக் கூறு:** அன்றாட வாழ்க்கையில் நடைபெறுவதைப் போல உரையாடலை அமைத்து ஒரு பொருள் அல்லது சேவையின் சிறப்பை நடிப்பு மூலம் விளக்குதல். இங்கு அறிவிப்பாளர் பங்கு கொள்ளலாம். பங்கு கொள்ளாமலும் விடலாம். கிண்கிணிப் பாடலும் அறிவித்தலும்: ஜிங்கிள் என்னும் ஆங்கிலப் பதத்துக்கு சில்லையூர் செல்வராசன் உருவாக்கிய சொற்றொடர் கிண்கிணிக் கீதம். பாடலும் அறிவித்தலுமாக இந்த வகை விளம்பரம் அமையும். கேட்போர் மனதில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும் வல்லமை இந்த வகையான விளம்பரங்களுக்கு உண்டு. மறைந்த வானொலி அறிவிப்பாளர் எஸ்.பி. மயில்வாகனன் கோபால் பற்பொடியை விளம்பரப்படுத்துவதற்கு உருவாக்கிய பாடலை பழைய தலைமுறையினர் இன்றும் நினைவு கூருவர். அதுவே தமிழில் தயாரிக்கப்பட்ட முதலாவது விளம்பரப் பாடல் எனவும் கருதப்படுகிறது.

மனிதர் காற்று அதனை ஒன்றும் செய்ய முடியாது என்று அது சொல்லிற்று. "எங்களுக்கும் இரண்டு கால்கள்தானே இருக் கின்றன" என்று பறவைகள் இந்த சூத்திரத்துக்கு முதலில் ஆட்சேபம் தெரிவித்தன. ஆனால் அது சரி யல்ல என்று ஸ்நோ பால் அவற் றிற்கு நிரூபித்து விட்டது. தோழர் களே! பறவை களின் இறக்கை கள் அவற்றிற்கு கைகள் மாதிரி. வேறு எதுவும் செய்ய உபயோகப் படுவதில்லை. மேலே சென்று பறப்பதற்கே அவை உபயோகப்ப டுகின்றன. அவற்றையும் கால்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே பறவைகளுக்கு நாலு கால் கள் இருக்கின்றன." என்று ஸ்தாபித்துத் தனது சூத்திரத்தை மெய்யாக்கியது ஸ்நோபால். "மனிதனின் முக்கிய சின்னம் அவன் கைகள்தான், அவற்றால் தான் அவன் விஷமம் செய்கிறான்" என்றது ஸ்நோ பால். பறவைக ளுக்கு ஸ்நோபாலின் பேச்சில்





வந்த பெரிய வார்த் தைகள் பல புரியவில்லை. ஆனால் அதனுடைய வாதத் தின் முடிவை அவை ஏற்றுக் கொண்டன. விலங்கு வர்க்கத்திலே தாழ்ந்தவை எல்லாம் புது சூத்தி ரத்தை மனப் பாடமாகப் படித்துக் கொண்டன.

"நாலுகால் நல்லது, இரண்டுகால் கெட்டது" என்கிற சூத் திரம் அந்த ஏழு விதிக ளுக்கும் மேல். அதைவிடப் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டது. இந்த சூத்தி ரத்தை மனப் பாடமாகக் கற்றுக் கொண்ட பின், ஆடுகளுக்கு இது மிகவும் பிடித்துப்போய் விட்டது. ஆகவே, அவை சமய சந்தர்ப்பமில்லாமல் தங்கள் சன்னக் குரலில் இந்த சூத்திரத்தை அடிக்கடி கோஷ்டியாகப் பாட ஆரம்பித்து விடும். "நாலுகால் நல்லது, இரண்டு கால் கெட்டது" என்று மணிக் கணக்காக, அலுக்காமல் அவை உரக்கப் பாடிக் கொண்டே கிடக்கும். ஸ்நோபாலின் கமிட்டி வேலைகளில் நெப்போலி யன் அதிகக் கவனம் செலுத்துவதே கிடையாது. வயது வந்தவர்களுக்கு எதுவும் சொல்வதைவிட வயதாக தவர் களுக்குப் படிப்புச் சொல்லித் தருவதுதான் மிகவும் முக்கியமான விஷயம் என்று அது கருதிற்று. புல் அறுவடையானவுடனேயே ஜெஸ்ஸியும் ப்ளூபெல்லும் குட்டிகள் போட்டன. இரண்டு நாய்களினுடைய குட்டி களுமாக ஒன்பது திடமான குட்டிகள் இருந்தன. பால் குடிப்பதை நிறுத்தி யவுடன் அவற்றிற்குக் கல்வி கற்பிக் கும் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொள்வதாகக் கூறி, அவற்றின் தாய்களிடமிருந்து பிரித்துக் கொண்டு வந்துவிட்டது நெப்போலியன்.


(நாளை..)

## வரைவோம் வாருங்கள்!



# சிறுவர் அமுதம்

## தலதா மாளிகை



**தலதா** மாளிகை என்பது இலங்கையின் கண்டி நகரில் உள்ள பௌத்த ஆலயம். இது புனித தந்த தாது ஆலயம் எனவும் அழைக்கப்படுகின்றது. பௌத்த சமயத்தவர்களால் உயர்வாக மதிக்கப்படுகின்ற புத்தரின் புனிதப் பல் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. 1592 தொடக்கம் 1815 வரை இருந்த கண்டி இராச்சியத்தின் தலைநகரமாகக் கண்டி நகரம் விளங்கியது. அதனை ஆண்டு வந்த அரசர்களின் அரண்மனை வளாகத்தின் உள்ளேயே இவ்வாலயமும் அமைந்துள்ளது.


நாளொன்றுக்கு மூன்று தடவைகள் கிரியைகள் நடைபெறு கின்றன. ஒவ்வொரு புதன்கிழமையும் புனிதப்பல் "நனுமுரா மாங்கல்யா" என்றழைக்கப்படும் நறுமணப்பூக்கள், மூலிகைகள் சேர்க்கப்பட்ட நீரால் நீராட்டப்படுகிறது. குணமாக்கும் திறன் கொண்டதாகக் கருதப்படும் இந்தப் புனிதநீர் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

### தேசியக் கொடி



தற்போதுள்ள இலங்கையின் தேசியக்கொடி 1950-ல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

தேசியக்கொடி மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ளது. இதில் இரண்டு பகுதிகளைக் காணமுடியும். கொடிக் கம்பத்தின் பக்கம் இருக்கும் பகுதியில் செம்மஞ்சளும், பச்சையுமான நிலைக்குத்தான இரண்டு பட்டைகள் உள்ளன. கொடியின் பெரும் பகுதியை அடக்கி யுள்ள மற்றப் பகுதி கருஞ் சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிறத்திலான வாளேந்திய சிங்கமொன்றையும், நான்கு மூலைகளிலும் அரச மரத்து இலைகளையும் கொண்டுள்ளது. செம்மஞ்சள் நிறப் பட்டை தமிழரையும், பச்சை நிறப் பட்டை முஸ்லீம்களையும், சிங்கத்துடன் கூடிய கருஞ் சிவப்பு நிறப் பகுதி சிங்களவர்களையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது.




### நாகமரம்

இலங்கையின் தென்கிழக்கில் உள்ள தெல்வத்தை என்னுமிடத்தில் உள்ளது. நறுமணம் மிக்க பூக்கள், வலிமையான பலகை என்பவற்றுக்காக இது அயன மண்டலப் பகுதிகளிற் பயிரிடப்படுகிறது. 100 அடி உயரம் வரை வளரும் இத்தாவரத்தின் அடிப்பகுதி 2 மீற்றர் விட்டம் வரை வளர்வதுண்டு.

### இலங்கையின் தேசிய சின்னங்கள்


தேசிய மரம் நாகமரம் தேசியப் பறவை காட்டுக்கோழி
தேசிய மிருகம் யானை தேசிய மலர் நீலஅல்லி

### நல்ல நாய்க்குட்டி



சின்னச் சின்ன நாய்க்குட்டி
வெள்ளை நிற நாய்க்குட்டி
பஞ்சுப் பொதி நாய்க்குட்டி
பன்னும் தின்னும் நாய்க்குட்டி
நன்றி சொல்லும் நாய்க்குட்டி
சின்னச் சின்னக் குழந்தைகள்
கொஞ்சி மகிழும் நாய்க்குட்டி
உன்னைக் கண்டால்
பிஞ்சுகள்
நெஞ்சம் மகிழ்ந்து கொஞ்சுமே
துள்ளித் துள்ளி ஓடுவாய்
அள்ளிஅள்ளித் தூக்கலாம்
வாலை வாலை ஆட்டியே
வரவேற்பு தருவாயே

### விடுகதைகள்




1.ஒற்றை கிண்ணத்துக்குள் இரட்டைத் தைலங்கள் அவை எவை?

2.நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்?

3.வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு. வயிறில்லை. அது என்ன?

4.தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்?

5.சின்னஞ்சிறு தூசி விழுந்தது, ஆனால் குளமே கலங்கியது. அது என்ன?

1.முட்டை 2.பென்சில்
3. அகப்பை 4.தொலைபேசி
5. கண்

### சுடோக்கு எண் 25 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 2 | 1 | 3 | 7 | 9 | 5 | 4 |
| 5 | 4 | 7 | 9 | 8 | 6 | 1 | 2 | 3 |
| 1 | 9 | 3 | 5 | 2 | 4 | 8 | 6 | 7 |
| 4 | 2 | 8 | 6 | 7 | 1 | 3 | 9 | 5 |
| 7 | 6 | 9 | 3 | 5 | 8 | 2 | 4 | 1 |
| 3 | 1 | 5 | 2 | 4 | 9 | 6 | 7 | 8 |
| 9 | 3 | 4 | 7 | 1 | 2 | 5 | 8 | 6 |
| 8 | 5 | 6 | 4 | 9 | 3 | 7 | 1 | 2 |
| 2 | 7 | 1 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 |

### சுடோக்கு எண் 26

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 | 1 | | | |
| 8 | | 2 | | 4 | | | | 7 |
| | 9 | | 3 | 7 | | 2 | | 5 |
| | | 4 | | | | 7 | 8 | |
| | 8 | | | | | | 2 | |
| | 7 | 6 | | | | 1 | | |
| 4 | | 8 | | 2 | 6 | | 3 | |
| 7 | | | | 3 | | 4 | | 1 |
| | | | 9 | 1 | | | | |

### குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# முருகன் புகழ் பாடிய அருணகிரிநாதர்

திருப்புகழ் படிக்கும் தோறும் எம்கண் வருபவர் அருணகிரிநாதர். சைவத்தில் திருமுறை எந்த அளவிற்கு சிறப்புப்பெறுகின்றதோ அந்தளவிற்கு முருக வழிபாட்டில் திருப்புகழ் தனித்துவம் பெறுகிறது. வாக்குக்கு அருணகிரி என்று கூறுமளவிற்கு இந்தியாவிலுள்ள முருகதலங்கள் மீது மட்டுமன்றி, இலங்கையிலும் கதிர்காமம் மீது பல திருப்புகழ் பாடல்களை பாடியுள்ளார். அருணகிரிநாதர் திருகோணமலை பற்றி ஒரு திருப்புகழிலும், யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் பற்றி இன்னொரு திருப்புகழிலும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

இவர் கி.பி. 15ஆம் நூற்றாண்டளவில் திருவண்ணாமலையில் பிரபுடதேவராய மன்னன் காலத்தில் வாழ்ந்தவர். சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்தமையால் தீய பழக்கங்களில் ஈடுபட்டு நோயாளியாகவும் மாறியதுடன் ஊரவர்களின் ஏளனத்துக்கு ஆளாகினார். திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் வடக்கு கோபுரத்தில் ஏறிக் குதித்து தன் உயிரை விட தீர்மானித்தார். முற்பிறவியின் நல்ல பயனும் கோபுரத்தை தரிசித்த பெருமையும் முருகப் பெருமான் [illegible]ங்களால் அவர் காப்பாற்றப்பட்டார்.

முருகன் முன்னே காட்சி கொடுத்து நாவில் தனது வெற்றி வேலால் ஓம் எனும் பிரணவ மந்திரத்தை எழுதி "முத்து" என அடியெடுத்துக் கொடுத்து தன்னைப் பாடுமாறு பணித்தார். அருணகிரிநாதரோ "முத்தைத் தரு பத்தித் திருநகை..." என ஆரம்பிக்கும் திருப்புகழ் பாடத்தொடங்கி பதினாறாயிரம் பாடல்களைப் பாடினார். இப்போது 1346 திருப்புகழ களே எஞ்சியுள்ளது. இலங்கையில் எல்லா ஆலயங்களிலும் பஞ்சபுராணத்தைத் தொடர்ந்து திருப்புகழ் பாடப்பட்டு வருகின்றது.

முருகப் பெருமான் திருவருளால் திருப்புகழ் பாடிய காலத்தில் அவரது நோய் நீங்கப் பெற்றது. பிரபுட தேவராய மன்னன் தனது ஆஸ்தான புலவராக அருணகிரிநாதரை நியமித்தான்.

அருணகிரிநாதர் மீது பொறாமை கொண்ட சம்பந்தாண்டான் என்பவன் வியக்கும் வண்ணம் "அதலசேடனாராட...." எனும் தொடக்கத் திருப்புகழைப் பாடி சபையோர் காண முருகன், மயில், வள்ளி, தெய்வயானை, சிவன், பார்வதி, நாராயணன் ஆகிய தெய்வங்களையே அழைத்துக்கொண்ட பெரும் பக்தியாளரானார்.

கந்தரந்தாதி பாடிய காலத்தில் வில்லிபுத்தூரர் வென்று கொள்ள "திதத்த..." எனும் பாடலைப் பாடி பெருமை பெற்றார். அருணகிரிநாதர் கூடுவிட்டு கூடுபாயும் வல்லமை பெற்றவர். மன்னனின் கண் சுகம் பெறவேண்டிக் கிளி உருவெடுத்து பாரிஜாதமலர் பெற்றுக்கொடுத்தார். இவ்வேளை சம்பந்தாண்டான் இவரது நிஜ உடலை எரித்துவிட கிளி உருவிலிருந்தே கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் ஆகிய தோத்திரங்களைப்பாடி முருகனை வழிபட்டார். இக்கிளியே திருத்தணிகை முருகப் பெருமானின் புயத்தில் காணப்படுகின்றது.

மேலும் வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் திருவெழுக் காற்றிருக்கை ஆகிய பக்தித் தோத்திரங்களையும் பாடினார். இவருடைய வாழ்வினால் முருக வழிபாடு இந்தியாவிலும் அண்டைய நாடுகளிலும் மிகப் பிரபல்யமானது. இவரின் திருப்புகழ் சந்தத் தமிழும், தாளச் சிறப்பும் கொண்டவை. இத்தகு அருணகிரிநாதரே கிளி வாகனமாக முருகப் பெருமானைத் தாங்குகிறார்.


நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் கடந்த ஆண்டு (2011) ஆவணி மாதத்து கார்த்திகை நட்சத்திரத்தினத்தன்று சண்முகப் பெருமான் திருவாயிலில் (தெற்கு வாசல்) இராஜகோபுரம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்கோபுரத்தில் முதலாம் தளத்தில் அருணகிரிநாதர் கிளியுருவில் காணப்படுகின்றார். இதற்கு முன்தினமான பரணி நட்சத்திர நாளன்று அருணகிரிநாதருக்கு தெற்கு வீதியின் தெற்குப் புறமாக சிறு கோயில் அமைக்கப்பட்டதுடன் ஆறுமுக சுவாமியை வணங்கிய நிலையில் வடக்கு நோக்கிப் பார்க்கும் வகையில் அருணகிரிநாதர் திருவுருவச் சிலையொன்றும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இவ்வாண்டும் இன்றைய பரணி நட்சத்திர நாளில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இரவுத் திருவிழா நிறைவடைந்து அர்த்த ஜாமப் பூசையின் பின்னர் அருணகிரிநாதர் உற்சவம் நடைபெற வுள்ளது. சைவாலயங்களில் சிவனடியார்களுக்கு விழா நடைபெறுவது போல முருக தலங்களில் அருணகிரிநாதர், கச்சியப்ப சிவாசாரியார் போன்றோருக்கு விழா எடுப்பதும் அவர்களுடைய நூல்களை ஆய்வு செய்து நல்ல கருத்துக் களை இக்காலத்தவருக்கு எடுத்துக் கொடுப்பதும் எதிர்காலத்தில் ஆன்மீகம் மிளிர வழிவகுக்கும் என்பதை நாமும் நினைந்து செயற்படுவோமாக!

*- சைவப்புலவர்*
*செ. கந்த சத்தியதாசன்*

# நல்லைக் கந்தன் மகோற்சவம்

## இன்று பதினேழாம் நாள்



### ஏறிடு மாமயில் மேல் வரும் காட்சி!

ஆறுதாழ் நீள்சடை ஐயனின் கண்ணருள்
ஆறுடைச் செம்முக ஐயனாய்த் தோன்றியோன்
ஏறிடு மாமயில் மேல்வரு காட்சியால்
ஆறுதல் பெற்றிடச் செய்திடும் நல்லையே!

*- பண்டிதர் சி.கார்த்திகேசு*

### நம்பி நாளும் வழிபடுவீர்!

நம்பினோர் கெடுவ தில்லை நல்லையில்
நம்பிவந்து எந்நாளும் வழி படுவாய்
உம்பரும் வணங் கிடும் வெற்றிவேல்
தம்பிநீவிர் நம்பி நாளும் வழிபடுவீர்!

*- ச.சிவகாந்தன், புத்தூர்*

### நிம்மதியை நமக்கு தந்திடுவாயே!

சரவண பவவென உனைத் துதித்தால்
சஞ்சலம் தீர்த்திடும் வேலவன்
தரணி யில்நாம் உய்ய நல்லைவேலே
தஞ்சமாம் என்று எண்ணு
அரகரன் புகழும் அற்புதத் தெய்வம்
ஆதிமூல வெற்றிவேற் குமரன்
நிரந்தர மானவன் சண்முக நாதன்
நிம்மதி நமக்கு தந்திடுவாயே!

*- தி.லோஜினி, வட்டுக்கோட்டை.*

# சுந்த மூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு

(வல்வெட்டித்துறை)

"ஆன்மீக சிந்தனைகள் அருகிக் கொண்டுவரும் இன்றைய கால கட்டத்தில் இளைய தலைமுறையினர் எமது சமயம் பற்றி விழிப்புணர்வு அடைந்து கொள்ளும் வகையில் எமது சமயப் பெரியார்களை நினைவு கொண்டு எமது நெஞ்சங்களிலும் நிறுத்திக் கொள்ளவேண்டும்" என இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் கூறினார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், உடுப்பிட்டி, சந்தை வீதி சைவத் திருத்தொண்டர் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடாத்திய சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை வல்லை வாழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றலில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கிப் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் மேலும் , பேசுகையில், அறநெறிப் பாடசாலை மூலமே ஆத்மீகச் சிந்தனைகளையும் சமயம் சார்ந்த உண்மைகளையும் பழக்க வழக்கங்களையும் நற்பண்புகளையும் கலாசாரத்தையும் நிலை நிறுத்த முடிகின்றது. எனவே இவற்றுக்கு முதன்மையளித்து ஒவ்வொரு பிள்ளைகளையும் அறநெறிப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். சிறியோர்களை வழி காட்ட வேண்டியது சமுதாயத்திலுள்ளபெரியோர்களின் தார்மீக கடமை. இதனை அனைவரும் மனதில் கொள்வது அவசியமாகும் என றார்.

இந்நிகழ்வின் போது அறநெறிப் பாடசாலைத் தலைவர் நா.ஆனந்தராசா வரவேற்புரையையும், ஸ்ரீ வல்லை வாழி சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. ஜெயச்சந்திரக் குருக்கள் ஆசியுரையையும், இமையாணன் மேற்கு கிராம அலுவலர் மா.சிவநேசன், உடுப்பிட்டி கிராம அலுவலர் நா.மகாநேசன் ஆகியோர் வாழ்த்துரைகளையும், அறநெறிப் பாடசாலை ஆசிரியை திருமதி வித்தியா பகீரதன் நன்றியுரையையும் நிகழ்த்தினார்கள்.

இந்த வைபவத்தின் போது இளம் சைவப்புலவர் எஸ்.கைலாயநாதன் "மாசிலா மரபில் வந்த வள்ளல்" எனும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவும், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கிய தீப நடனம், கோலாட்டம், பாம்பு நடனம், வில்லிசை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் சிறப்பு அம்சங்களாக இடம்பெற்றன. (01)

# செல்வச் சந்நிதி வருடாந்த மகோற்சவம்

(வல்வெட்டித்துறை)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) இரவு 10.15 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பதினைந்து தினங்கள் உற்சவம் நடைபெறும்.

5ஆம் நாளாகிய 21ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மாலை 4.30 மணிக்கு வேல் பெருமான் உற்சவமும், பத்தாம் நாளாகிய 26ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு பூங்காவன உற்சவமும், பதினொராம் நாளாகிய 27ஆம் திகதி (திங்கட்கிழமை) கைலாச வாகன உற்சவமும் 13ஆம் நாளாகிய 29ஆம் திகதி (புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 14ஆம் நாளாகிய 30ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 15ஆம் நாளாகிய 31ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை 7.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவிருக்கின்றன. அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு நடை பெறும் மௌனத் திருவிழாவுடன், இவ்வருட மகோற்சவம் நிறைவு பெறும்.

செப்டம்பர் முதலாம் திகதி (சனிக்கிழமை) தொண்டர் பூசையும், தொண்டர் கௌரவிப்பும் இடம் பெறும் என்றும் விசேட திருவிழாக்கள் தவிர்ந்த ஏனைய பகல் திருவிழா காலை 8.00 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 5.00 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும் எனவும் ஆலயப் பொறுப்பாளர் ஆறுமுக சாமி ஐயர் சிவசண்முகஐயர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் "இந்து மதம் காட்டும் ஆன்மீகம்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகின்றார்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது நயினாதீவு அமுதசுரபி அறநெறிப் பாடசாலை மற்றும் மூளாய் ஞானஒளி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகளுடன், இசைக் கலைமாணி திருமதி அன்னலக்சுமி தனபாலசிங்கம் வழங்கும் பக்திப்பாடல் நிகழ்ச்சியும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன. (க)

*****************************************************

### துர்க்காதேவி மணி மண்டபத்தில்

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று எஸ்.கோபிதாஸ், கே.குகபரன் இணைந்து வழங்கும் வயலின் கச்சேரி இடம்பெறுகிறது.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இந்நிகழ்வின்போது கே.கண்ணதாசன் (மிருதங்கம்), பிரம்மஸ்ரீ சிவசுந்தரசர்மா (கடம்) ஆகியோர் பக்கவாத்தியம் வழங்குவார்கள். (க)

*****************************************************

### நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில்

சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று சைவப் புலவர் பொன்.சுகந்தன் "யாமிருக்கப் பயமேன்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்ச்சி மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். (க)

# சிரியாவில் மருந்துகள் இல்லாமல் நோயாளிகள் அவதி: மக்களின் உயிருக்கு ஆபத்து



சிரியாவில் கடந்த ஓராண்டிற்கும் மேலாக தொடர் சண்டை நடந்து வருவதால், மருந்து நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் நோயாளிகள் பெரும் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

சிரியாவில் போராட்டக்காரரகளை ஒடுக்க இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா மறைமுக ஆதரவும் அளித்து வருவதால், டமாஸ்கஸ், ஹாம்ஸ், அலெப்போ உள்ளிட்ட பெருநகரங்களில் தொடர்ந்து சண்டை நடக்கிறது.

இதனால் இங்குள்ள மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன. சிரியா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையினாலும், மூலப்பொருட்கள் கிடைக்காததாலும் மருந்து நிறுவனங்கள் இந்த முடிவை மேற்கொண்டுள்ளன.

போதிய மருந்துகள் கிடைக்காததாலும், தொடர் சண்டையினால் கட்டிடங்கள் சேதமடைந்ததாலும் சில மருத்துவமனைகளும் மூடப்பட்டு விட்டன. இதனால் நோயாளிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

நீரிழிவு, புற்றுநோய், மஞ்சள் காமாலை, வயிற்று போக்கு, காசநோய், சிறுநீரக கோளாறு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மருந்து கிடைக்காததால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

பல மாதங்களாக நடக்கும் சண்டையால் சிரியாவின் சுகாதாரத் துறைக்கு சொந்தமான, 200 ஆம் புலன்சுகள் சேதமடைந்துள்ளதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உணவு கையிருப்பும் கணிசமான அளவில் குறைந்து விட்டதால் உணவு பஞ்சம் ஏற்படும் சூழல் இருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது. ஏற்கனவே சிரியாவிலிருந்து, 1.5 லட்சம் பேர் அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக பார்வை

## பிலிப்பைன்ஸ் தலைநகரம் வெள்ளத்தில் மூழ்கியது


பிலிப்பைன்ஸில் தொடர்ந்து பெய்து வரும் புயல்மழையால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர். வியாபாரக் கடைகள், வர்த்தக அலுவலகங்கள் என அனைத்தும் மூடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மணிலாவில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக பலர் மண்ணில் புதையுண்டனர். தண்ணீர் கரைபுரண்டு ஓடுவதால் பலர் தங்களது உடைமைகளை இழந்து தவிக்கின்றனர்.

ஒரு வாரத்துக்கு முன்பு மணிலாவில் பெய்த Typhoon Saola (டைபூன் சயோலா) என்ற புயலால் ஐம்பதிற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். மேலாண்மைக் குழுவின் அறிக்கைப்படி தலைநகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

மேலும் தைவானுக்கு வடகிழக்கில் 300 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ள ஹாய்குய்" என்ற புயல் சின்னத்தால் இன்னும் அதிக மழை பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மலைப்பகுதியில் நிலச்சரிவும் தரைப் பகுதியில் வெள்ளப் பெருக்கும் உண்டாகும் என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

ஜனாதிபதி பெனிக்னோ அகினோ வெள்ளச் சேதம் குறித்து தனது அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.



சிரியா, டமாஸ்கஸில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட சிரிய அதிபர் பாஷீர் ஆசாத் மற்றும் ஈரான் தேசிய உயர்மட்ட பாதுகாப்பு கவுன்சிலின் தலைவர் சயீது ஜலிலி.

# அமெரிக்க துப்பாக்கி சூடு: அரைக் கம்பத்தில் தேசியக் கொடியை பறக்க வீட உத்தரவு

அமெரிக்காவின் குருத்வாராவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், தேசியக் கொடி வரும் 10 ஆம் திகதி வரை அரைக் கம்பத்தில் பறக்கவிட உத்தரவிடப்பட்டுள்ளது.


அமெரிக்காவின் விஸ்கோஸ் நகரில் உள்ள சீக்கிய வழிபாட்டு தலமான, குருத்வாராவில் இன வெறியோடு நிகழ்த்தப்பட்ட கண்மூடித் தனமான துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமெரிக்காவின் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படுகிறது.

அமெரிக்க அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்த சம்பவத்தில் உயிரிழந்த சீக்கியர்களுக்காக மட்டுமின்றி, மற்றவர்களின் உயிரைக் காப்பாற்ற உயிர் நீத்த காவல்துறையினருக்கும் அஞ்சலி செலுத்துகிறோம் என்று கூறப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் வெள்ளை மாளிகை மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களிலும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் மட்டுமின்றி வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்களிலும் அமெரிக்க கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன.

## அமெரிக்காவுக்கு மாம்பழ ஏற்றுமதி ரத்து: பாக். முடிவு



அமெரிக்காவுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்வதை, பாகிஸ்தான் வர்த்தகர்கள் நிறுத்தியுள்ளனர். உலகிலேயே அதிக மான மாம்பழங்களை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஐந்தாம் இடத்தையும், ஏற்று மதி செய்வதில் மூன்றாம் இடத்தையும் வகிக்கிறது பாகிஸ்தான். ஈரான் மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ளதால், அந்த நாட்டுக்கு மாம்பழ ஏற்றுமதி செய்ய இயலாத நிலை பாகிஸ் தானுக்கு ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 3 லட்சம் டன் மாம் பழங்கள் ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. பாகிஸ்தானில் தற்போது மாம்பழ உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், மாம்பழ உற்பத்தியாளர்களும், வர்த்த கர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் செலவு அதிகரித்துள்ளது. இதன் படி இரண்டு கிலோ மாம்பழங்கள் அடங்கிய பெட்டி 1,250 ரூபாய் விலையாகிறது. இதை அமெரிக்க மாம்பழ பிரியர்களும் அதிக விலையாக நினைக்கின்றனர். இதன் காரணமாக அமெரிக்காவுக்கு மாம்பழங்களை ஏற்றுமதி செய்யும் திட்டத்தை, பாகிஸ்தான் வர்த்தகர்கள் ரத்து செய்துள்ளனர்.

# மலேசியாவில் பேயோட்டும் சடங்கில் மூன்று வயது சிறுமி பரிதாபமாக பலி

மலேசியாவில் பேயோட்டும் சடங்கில் மூன்று வயது சிறுமி பலியாகி உள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவம் குறித்து காவல் துறையினர் கூறுகையில், மலேசியாவின் வடபகுதியில் உள்ள பெனாங் மாகாணத்தில் பேயோட்டும் சடங்கொன்று நடந்தது.

தாங்கள் அங்கு சென்று பார்த்த போது, இந்தோனேஷிய நாட்டின் பணிப்பெண் உட்பட எட்டு பேர் இருந்தனர் என்றும், அவர்கள் அனைவரும் ஓர் இருட்டு அறையில் மூன்று வயது சிறுமியை சூழ்ந்து கொண்டு ஏதோ மந்திரங்கள் சொல்லிக் கொண்டிருந்தனர் என்றும் தெரிவித்தனர்.

இவ்வாறு செய்ததால் அந்த சிறுமிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு சிறுமி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார்.

இதற்கு இந்த சிறுமியின் பெற்றோரும், அந்த பணிப்பெண்ணுமே காரணம் என்றும் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தப் பேயோட்டும் சடங்கு பல மணி நேரங்கள் இடம்பெற்றதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# நோயாளி மனைவியை சுட்டுக் கொன்ற கணவன்

உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்து நோயாளி மனைவியை, கணவர் சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவின் ஓகியோ நகரில் வசிப்பவர் ஜான் வைஸ் (வயது 66). இவரது மனைவி பார்பரா (வயது 65).

இவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு, ஓகியோவில் உள்ள அக்ரான் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் கடந்த 5ஆம் திகதி மனைவியை பார்க்க மருத்துவமனைக்கு சென்றார் ஜான். மனைவியின் படுக்கை அருகே சென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த ஜான், திடீரென கைத்துப்பாக்கியை எடுத்து மனைவியை சுட்டார்.

சத்தம் கேட்டு மருத்துவர்கள் ஓடி வந்து பார்த்து போது, அங்கு ரத்த வெள்ளத்தில் பார்பரா இறந்து கிடந்தார். அதை கண்டு அதிர்ச்சி அடைந்த மருத்துவர்கள், ஜானுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதற்குள் தகவல் அறிந்து பொலிசார் விரைந்து வந்து அவரை கைது செய்தனர். ஜான் மீது கொலை வழக்கு பதிவு செய்து பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

நோயில் இருந்து சிறிது சிறப்பாக குணமடைந்து வந்த பார்பராவை எதற்காக ஜான் சுட்டுக் கொன்றார் என்பது தெரியவில்லை என்று மருத்துமவனை தெரிவிக்கின்றன.

## ரஷ்ய ரொக்கெட் நடுவானில் தோல்வி

ரஷ்யா நேற்று முன்தினம் விண்ணில் செலுத்திய புரோட்டான் எம் ரொக்கெட் புவி வட்டப்பாதையில் செயற்கைக் கோள்களை நிலை நிறுத்த இயலாமல் நடுவானில் தோல்வியடைந்தது.

ரஷ்ய விஞ்ஞானிகள் உருவாக்கிய புரோட்டான்-எம் ராக்கெட், கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்தில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை விண்ணில் செலுத்தப்பட்டது.

அதில் இந்தோனேசியாவின் டெல்காம்-3 செயற்கைக்கோளும், ரஷ்யாவின் எக்ஸ்பிரஸ் எம்.டி.-2 செயற்கைக்கோளும் வைக்கப்பட்டிருந்தன.

எனினும் ராக்கெட்டில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அதனால் இந்த 2 செயற்கைக் கோள்களையும் புவி வட்டப் பாதையில் நிலைநிறுத்த இயலவில்லை.


# அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்புடன் ஈரான் பயணமாக உள்ள மன்மோகன் சிங்

ஈரான் மீது அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்திருக்கும் இந்நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் அணி சேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஈரான் செல்கின்றார்.

NAM (Non Aligned Movement) எனப்படும் அணிசேரா நாடுகளின் மாநாடு ஈரானில் நடைபெற உள்ளது.

இது அணிசேரா இயக்கத்தின் 16ஆவது மாநாடாகும். இதில் 120 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளது.

இம்மாநாட்டில் பங்கேற்க வரும் 29ஆம் திகதி ஈரான் செல்லும் பிரதமர் மன்மோகன் சிங், அங்கு 3 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றார். இம்மாநாட்டில்



அந்நாட்டு ஜனாதிபதி அஹ்மது நிஜாதை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

ஏற்கனவே ஈரானின் அணு திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன. கச்சா எண்ணெய் இறக்குமதியையும் தடை செய்துள்ளது.

இதுபோன்ற செயற்களில் இந்தியாவும் ஈரானுடன் எந்த விதமான உறவு வைத்துக் கொள்ளக் கூடாதென வலியுறுத்தி வருகின்றது.


இந்நிலையில் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஈரான் பயணம் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியில் அமைந்துள்ளது.

மன்மோகன் சிங் ஈரான் பயணம் மேற்கொள்ளக்கூடாதென அமெரிக்க, ஐரோப்பிய தலைவர்கள் அவரை மறைமுகமாக வலியுறுத்தினார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றது.

# சட்ட விரோத ஊடுருவலைத் தடுக்க வங்கதேச எல்லையை மூட வேண்டும்

அசாம் மாநிலத்தில் சமீபத்தில் நடைபெற்ற வன்முறைக்கு, 70 இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். சட்டவிரோத ஊடுருவியர்கள் நடத்திய தாக்குதலே, இந்த வன்முறைக்கு காரணம் எனவும், எனவே, வங்கதேச நாட்டின் எல்லையை மூட வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி தலைவர் நிதின் கட்காரி கூறியுள்ளார்.

டில்லியில், தனியார் சனல் ஒன்றிற்கு பேட்டியளித்த நிதின் கட்காரி கூறியதாவது, அசாம் மாநிலத்தின் சிறிய பகுதியில் நிலவிய வன்முறை, சிராங், கோக்ராஜ்ஹர் உள்ளிட்ட 3 மாவட்டங்களை புரட்டிப்போட்டது. இந்த வன்முறைச் சம்பவங்களில்



சிக்கி 70இற்கும் மேற்பட்டோர் பலியாயினர். அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறையை கட்டுக்குள் கொண்டுவருவதற்கு மத்திய அரசு தாமதம் செய்தது என்பதை, அம்மாநில முதல்வர் தருண் கோகோய் கூறியுள்ளது,

**நிதின் கட்காரி**

நாட்டின் பாதுகாப்பிற்கு மத்திய அரசின் நடவடிக்கைகள் குறித்து ஐயம் கொள்ள வைக்கிறது.

இந்த வன்முறைச் சம்பவங்களுக்கு, சட்டவிரோதமாக அசாமில் ஊடுருவியர்களே காரணம் என்பது தெரியவந்துள்ளது. வங்கதேச நாட்டிலிருந்து பெரும்பாலோனோர், இந்தியாவிற்கு சட்டவிரோதமாக ஊடுருவி வருவதாகவும், இவர்கள், நாட்டின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சறுத்தலாக விளங்கி வருகின்றனர். எனவே, வங்கதேச எல்லையை மூடும் நடவடிக்கைகளில் மத்திய, மாநில அரசுகள் ஈடுபட வேண்டும் என்று அவர் கூறினார்.

# நித்தியானந்தா மீதான மருத்துவ பரிசோதனைக்குத் தடை விதிப்பு

மதுரை இளைய ஆதீனம் நித்தியானந்தா மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கில், அவருக்கு மருத்துவ பரிசோதனை நடத்த கர்நாடக உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு சுவாமி நித்தியானந்தாவுக்கு எதிராக தொடரப்பட்ட பாலியல் குற்றச்சாட்டு வழக்கு மற்றும் அமெரிக்க வாழ் இந்தியரான ஆர்த்தி ராவ் என்பவர் அளித்த புகார் தொடர்பாக கர்நாடக நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக நித்தியானந்



தாவிடம் இரத்த மாதிரி உள்ளிட்ட மருத்துவ சோதனைகளை நடத்த அனுமதி கோரி ராம் நகரில் உள்ள அமர்வு நீதிமன்றத்தில் கர்நாடக சி.ஐ.டி. பொலிஸார் மனுத் தாக்கல் செய்தனர். இதற்கு கடந்த யூன் 20ஆம் திகதி நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து நித்தியானந்தா தரப்பில் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இது தொடர்பாக நேற்று நடைபெற்ற விசாரணையில் ராம்நகர் நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்த தடை விதித்து நீதிபதி உத்தர விட்டார்.

இதனிடையே, நித்தியானந்தா தற்போது இமய மலைக்கு யாத்திரை சென்றிருப்பதாக கூறப்படுகிறது.

# இந்திய செய்திகள்

**அசாம் மாநிலத்தில் கலவரம்:**

## சி.பி.ஐ. விசாரணைக்கு தருண் கோகாய் உத்தரவு

அசாம் மாநிலம் கோக்ராஜ்கர் பகுதியில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளதையடுத்து பலி எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது.

அசாமின் கோக்ராஜ்கர், சிராங் மாவட்டங்களில் போடோ பழங்குடியினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தில் 56 பேர் உயிரிழந்தனர்.

இக்கலவரத்தில் ஏராளமான வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. வீடுகளை இழந்த மூன்று லட்சம் பேர் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.

மாநில மற்றும் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக கடந்த 10 நாட்களாக இயல்பு நிலை திரும்பியிருந்தது.

இந்நிலையில் கடந்த 5ம் திகதி அன்று சிராங், கோக்ராஜ்கர் பகுதிகளில் மீண்டும் கலவரம் வெடித்ததில் 5 பேர் பலியாயினர்.

பலி எண்ணிக்கை 73 ஆக உயர்வு: நேற்று முன்தினம் இரவு கோக்ராஜ்கர் மாவட்டத்தின் ராணி புல்லி கிராமத்தில் ஒரு பிரிவு மக்கள் மீது சிலர் துப்பாக்கியால் சுட்டதில் மூன்று பேர் பலியாயினர். இரண்டு பேர் காயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்கள் கவுகாத்தி மருத்துவ கல்லூரி மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அந்தப் பிரிவைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் நேற்று கோக்ராஜ்கர்- தூப்ரி மாவட்ட எல்லைப் பகுதியில் பெல்டோல் என்ற இடத்தில் தேசிய நெடுஞ்சாலை எண் 31ல் சாலை மறியலில் ஈடுபட்டதனால் கோக்ராஜ்கர் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு மீண்டும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் 24 மணி நேரமும் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள சிராங் மாவட்டத்தின் ராஜாபாரா பகுதியில் நேற்று ஒருவரின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

அத்துடன் வேறு சில இடங்களிலும் சிலரது உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனால் அசாமில் இதுவரை வன்முறைக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது.

**புலனாய்வுத்துறை விசாரணைக்கு பரிந்துரை:** அசாமில் சில மாவட்டங்களில் நடந்து வரும் வன்முறை தொடர்பாக சி.பி.ஐ விசாரணை நடத்த வேண்டும் என அம்மாநில முதல்வர் தருண் கோகாய் பரிந்துரை செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, வன்முறை சம்பவங்கள் தொடர்பாக சி.பி.ஐ விசாரணைக்கு பரிந்துரைத்துள்ளேன். இந்த விவகாரத்தில் மத்திய அரசுதான் இறுதி முடிவு எடுக்க வேண்டும். வன்முறைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.



புதுச்சேரி கடல் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள நீரோட்ட மாற்றம் காரணமாக, ஆழ் கடலில் இருக்கும் அரிய வகை மீன்களான நெத்தம்பாறை, செம்பாறை, கல்லூரி, அமோர் போன்ற மீன்கள் மீனவர்கள் வலையில் சிக்கி வருகின்றன.

# நாசா விஞ்ஞானிகளின் கியூரியாசிட்டி விண்கல பணியில் முக்கிய பங்காற்றிய இந்தியர்

செவ்வாய் கிரக ஆராய்ச்சிக்காக நாசாவால் அனுப்பப்பட்டுள்ள கியூரியாசிட்டி விண்கலம் எங்கு தரையிறங்க வேண்டும் என்பதை தீர்மானித்த குழுவில் பணியாற்றிய அமிதாப் கோஷ் என்ற இந்தியர் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.

நாசாவின் செவ்வாய் கிரக ஆராய்ச்சி மிஷனின் அறிவியல் செயற்பாட்டு பணிக் குழுவின் தலைவரான கோஷ், கியூரியாசிட்டி தரையிறங்க வேண்டிய இடத்தை தீர்மானிக்க அமைக்கப்பட்ட குழுவில் முக்கியப் பங்காற்றியுள்ளார்.

இது குறித்து அமிதாப் கோஷ், ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக உழைத்து இந்த கியூரியாசிட்டியை உருவாக்கினார்கள்.

இது செவ்வாயில் எங்கு தரையிறங்கும் என்பதை தீர்மானித்த போதெல்லாம் மிகவும் பதற்றமாகவே இருந்தோம் என்றார்.

ஒரு வேளை இந்த விண்கலம் தரையிறங்குவதில் தோல்வி அடைந்திருந்தால் மீண்டும் செவ்வாயைப் பற்றி நினைத்துக் கூட பார்க்க முடியாமல் போயிருக்கும்.

பூமியிலிருந்து கிட்டத்தட்ட 570 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து செவ்வாய் கிரகத்திற்கு கியூரியாசிட்டி பயணத்தை முடித்துள்ளது.

அது இறங்கிய இடத்தை முதலில் தெரிவு செய்ய ஆராய்ச்சிகள் நடந்தபோது "மௌன்ட் ஷேப்" என்ற செவ்வாய் கிரக மலைக் குன்று உள்ள பகுதியில்தான் விண்கலத்தை தரையிறக்க நல்ல இடம் என்று முடிவு செய்யப்பட்டது.

அந்தப் பகுதியில் ஈரப்பதம் இருப்பதையும் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் ஆய்வுக்கு இந்த மலைக் குன்று அருகே உள்ள கேல் கிரேட்டர் பகுதிதான் சரியானது என்ற தீர்மானத்திற்கு வந்தனர்.

தற்போது கியூரியாசிட்டி இறங்கியுள்ள பகுதியில் களிமண் இருப்பதாகவும், அங்கு சல்பேட் தாது நிறைந்திருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

கியூரியாசிட்டி விண்கலம் தனது முதல் முக்கியப் பணியாக மௌன்ட் ஷேப் மலைக்குன்றுக்குச் சென்று ஆய்வு மேற்கொள்ளவுள்ளது. அதில் கிடைக்கப் போகும் தகவல்கள் ஒவ்வொன்றும் திருப்புமுனையாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

# மாயமாகினர் கெமரூன் வீரர்கள்!

கெமரூன் நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் போட்டியாளர்கள் 7 பேர் பிரிட்டனில் காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இவர்களில் ஐந்து பேர் குத்துச்சண்டை போட்டியாளர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் பொருளாதார காரணங்களுக்காக ஐரோப்பாவில் தங்கியிருக்க தீர்மானித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படு கிறது.

முதலாவது மகளிர் கால்பந்தாட்ட அணியைச் சேர்ந்த மாற்று கோல்காப்பாளரான ட்ருசில்லே என்கோகா காணாமல் போனதாக கெமரூன் ஒலிம்பிக் குழுவினர் கூறியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன் பின்னர் நீச்சல் போட்டியாளர் ஒருவரும், குத்துச்சண்டை போட்டியாளர்கள் ஐவரும் ஒலிம்பிக் கிராமத்திலிருந்து காணாமல் போயுள்ளனர்.

முதலில் வதந்தி என கருதப்பட்ட விடயம் உண்மையாகியுள்ளது என கெமரூன் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு அனுப்பிய கடிதமொன்றில் அந்நாட்டு ஒலிம்பிக் குழுவின் தலைவர் டேவிட் ஒஜோங் தெரிவித்துள்ளார்.


# பதக்கப் பட்டியல்

லண்டனில் இடம்பெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் சீனா இழந்த முதலிடத்தை மீண்டும் கைப்பற்றியது.

நேற்று இரவு 10 மணி-வரையான முன்னிலை வகிக்கும் முதல் 20 நாடுகள் வெல்லப்பட்ட பதக்க பட்டியல் வருமாறு:-

| நிலை | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 34 | 21 | 19 | 74 |
| 2 | ஐ.அமெரிக்கா | 30 | 19 | 22 | 71 |
| 3 | இங்கிலாந்து | 22 | 13 | 13 | 48 |
| 4 | தென்கொரியா | 12 | 5 | 6 | 23 |
| 5 | ரஷ்யா | 10 | 18 | 20 | 48 |
| 6 | பிரான்ஸ் | 8 | 9 | 11 | 28 |
| 7 | ஜேர்மனி | 7 | 15 | 10 | 32 |
| 8 | இத்தாலி | 7 | 6 | 4 | 17 |
| 9 | ஹங்கேரி | 6 | 2 | 3 | 11 |
| 10 | கஸகஸ்தான் | 6 | 0 | 2 | 8 |
| 11 | அவுஸ்திரேலியா | 5 | 12 | 9 | 26 |
| 12 | நெதர்லாந்து | 5 | 3 | 6 | 14 |
| 13 | ஈரான் | 4 | 3 | 1 | 8 |
| 14 | வடகொரியா | 4 | 0 | 1 | 5 |
| 15 | கியூபா | 3 | 3 | 1 | 7 |
| 16 | நியூசிலாந்து | 3 | 2 | 5 | 10 |
| 17 | பேலரஸ் | 3 | 2 | 4 | 9 |
| 18 | தென்னாபிரிக்கா | 3 | 1 | 0 | 4 |
| 19 | உக்ரைன் | 3 | 0 | 6 | 9 |
| 20 | ஜப்பான் | 2 | 13 | 14 | 29 |

# பளுதூக்கலில் உக்ரைனுக்கு தங்கம்



லண்டன் ஒலிம்பிக் பளுதூக்குதலில் 105 கிலோ எடைப்பிரிவில் உக்ரைன் வீரர் ஒலக்சய் தங்கப் பதக்கம் வென்றார்.


லண்டனில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் பளுதூக்குதல் போட்டியில் ஆடவருக்கான 105 கிலோ பிரிவுக்கான போட்டி இன்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட 14 நாட்டு வீரர்களில் உக்ரைன் வீரர் ஒலக்சிய் ஸ்நட்ச் முறையில் 185 கிலோவும், கிளீன் அண்டு ஜர்க் முறையில் 227 கிலோவும் தூக்கி தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

ஈரான் வீரர் நவாப் ஸ்நட்ச் முறையில் 184 கிலோவும், கிளீன் அண்டு ஜர்க் முறையில் 227 கிலோவும் தூக்கி வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

போலந்து வீரர் போர்ட்லோமிஞ் "ஸ்நட்ச்" முறையில் 190 கிலோவும், கிளீன் அண்டு ஜர்க் முறையில் 220 கிலோவும் தூக்கி வெண்கல பதக்கத்தையும் வென்றார்.

# "ஸ்பிரிங் போர்ட் டைவிங்" தங்கம் ரஷ்ய வீரருக்கு




லண்டன் ஒலிம்பிக் போட்டியில் 3 மீற்றர் ஸ்பிரிங் போர்டு டைவிங்கில், ரஷ்ய வீரர் இல்லியா சகரோவ் தங்கப்பதக்கம் வென்றார்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் ஆடவருக்கான ஸ்பிரிங்போர்டு டைவிங் போட்டி அக்வாடிக் சென்டரில் நேற்று நடைபெற்றது.

ஆறு கட்டங்களாக நடைபெற்ற இப்போட்டியில் 555.90 புள்ளிகள் எடுத்து முதலாவதாக வந்த ரஷ்யாவின் இல்லியா சாகரொவ் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

541.75 புள்ளிகள் எடுத்து அடுத்ததாக வந்த சீனா வீரர் கைகின் வெள்ளிப் பதக்கத்தையும், மற்றொரு சக நாட்டு வீரரான சோங் ஹெ 524.15 புள்ளிகள் எடுத்து மூன்றாவதாக வந்து வெண்கலப் பதக்கத்தை பெற்றனர்.

# வருகிறது பதவி உயர்வு



தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் பல்வேறு சாதனைகள் படைத்தும் தனக்கு உரிய கௌரவம் வழங்கப்படாததால் இந்திய இராணுவத்தில் இருந்து விலகப் போவதாக, லண்டன் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற விஜய் குமார் வேதனையுடன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், விஜய் குமார் உட்பட சிறப்பான சாதனைகள் புரியும் ராணுவ வீரர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது பற்றி உடனடியாக முடிவு செய்ய வேண்டும் என்று இந்திய இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோனிக்கு, இந்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மாக்கன் கடிதம் அனுப்பியுள்ளார். இதையடுத்து, விஜய் குமாருக்கு சுபேதார் மேஜர் அந்தஸ்து வழங்க உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அவர் தற்போது 16வது தோக்ரா ரெஜிமென்டில் சுபேதாராக இருந்து வருகிறார்.

# ஒலிம்பிக்கில் தங்கமே எனது கனவு - சாய்னா




லண்டன் ஒலிம்பிக் மகளிர் பட்மின்ரன் ஒற்றையர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்த இந்திய வீராங்கனை சாய்னா நெஹ்வால், இது ஒரு ஆரம்பம் மட்டுமே. மேலும் பல பதக்கங்களை வென்று சாதனை படைப்பேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஒலிம்பிக்கில் பதக்கம் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்த சாய்னாவுக்கு, அவரது சொந்த ஊரான ஹைதராபாத்தில் நேற்று உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பயிற்சியாளர் கோபிசந்த், தந்தை ஹர்வீருடன் மகிழ்ச்சி பொங்க வந்த சாய்னா, ஆயிரக்கணக்கான ரசிகர்களின் ஆரவார வாழ்த்தொலியை ஏற்றார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றதை இன்னும் கூட நம்ப முடியவில்லை. என் மகிழ்ச்சியை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை. உறுதியளித்தது போலவே பதக்கத்துடன் நாடு திரும்பியது திருப்தி அளிப்பதுடன் தன்னம்பிக்கையையும் அதிகரித்துள்ளது.

மேலும், தங்கம் வெல்ல வேண்டும் என்பதே எனது கனவு. ஆனால், குறைந்தபட்சம் வெண்கலம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. பட்மின்ரனில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்பதில் பெருமை அடைகிறேன். பதக்க மேடையில் நின்றபோது அழுகையை அடக்கமுடியவில்லை. பல ஆண்டு கடின உழைப்புக்கு கிடைத்த பலன் இது. இது ஆரம்பம்தான்," இந்தியாவுக்காக இன்னும் பல பதக்கங்களை வெல்வேன். இவ்வாறு சாய்னா கூறினார்.

# வட்டு எறிதல் இறுதிக்கு இந்திய வீரர் கவுடா தகுதி



லண்டன் ஒலிம்பிக் போட்டியின் வட்டு எறிதலில் இந்திய வீரர் விகாஸ் கவுடா முதலிடம் பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் தடகளப்போட்டியில் வட்டு எறிதல் போட்டிக்கான தகுதிச் சுற்று நேற்று நடைபெற்றது.

இதில் இந்திய வீரர் விகாஸ் கவுடா உட்பட 41 வீரர்கள் கலந்து கொண்டனர். 41 வீரர்களும் "ஏ", "பி" என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டனர்.

"ஏ" பிரிவில் இடம் பெற்றிருந்த இந்திய வீரர் விகாஸ் 65.20 மீற்றர் வட்டு எறிந்து முதலிடம் பெற்றார். அவருடன் முதல் 6 இடங்களை பெற்ற மற்ற நாட்டு வீரர்களும் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றனர்.

"பி" பிரிவில் எஸ்டோனியா வீரர் ஜெர்ட் கன்டர் 66.39 மீற்றர் வட்டு எறிந்து முதலிடம் பெற்றார். மேலும் இரண்டு முதல் 6 இடங்களை பெற்ற மற்ற வீரர்களும் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றனர்.

அதேபோல மகளிர் வட்டு எறிதலில் இந்தியாவின் கிருஷ்ன பூனியாவும் முதன்முறையாக இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 09.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது